1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

76-ம் புத்தகம் 42-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 25-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## ஜசிந்தாவின் மணிமொழிகள்

(முன்தொடர்ச்சி)

ஜசிந்தா விடைபெற்றுச சென்றகாட்சி பரிதாபமாயிருந்தது. கண்ணீர் தாரைதாரையாய் வடிந்தது. லூகியாவைத் திரும்பத்திரும்ப முத்தமிட்டாள். "நான் மோட்சம்சேரும் வரை எனக்காக விடாதுவேண்டிக்கொள்; நான்மோட்சம் போனபிற்பாடு உனக்காக விடாது பிரார்த்திப்பேன்; அந்தஇரகசியத்தை எவரிடமும் சொல்லாதே; உன்னைக்கொல்வதாய் இருந்தாலும் அதை வெளியிடாதே; யேசுவையும், மரியாயின் மாசற்ற இருதயத்தையும் நேசித்துவா; பாவிகள் மனந்திரும்பும்படி பரித்தியாகங்கள்செய்" என லூசியாவிடம் ஜசிந்தா கூறினள்.

ஜசிந்தா ஆஸ்பத்திரியில் சேர்த்துக்கொள்ளப்படும் வரை அவளைவைத்திருக்கும்படி ஒரு பணக்காரவீட்டில் ஒழுங்கு செய்திருந்தார்கள் ஆனல், சிறுமியின் நிலையைப்பார்த்ததும் அவ்வீட்டுக்காரர்பயந்து அவளை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். ஆதலின் ஒலிம்பியா கோவிலுக்கருகிலிருந்த அகதிகளின் மடத்துக்குச் சென்றாள். கோதினே சகோதரிஎன்ற ஒருகன்னியாஸ்திரி அந்தமடத்தைக் கண்காணித்துவந்தாள். அவள் பாத்திமாவைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தாள். தேவஅன்னையைப்பார்க்கும் பாக்கியம்பெற்ற சிறுவரைப்பார்க்கும்வரம்கேட்டுக் கடவுளைப் பிரார்த்தித்துவந்தாள். இப்பொழுதோ அவர்களில்ஒருத்தி அந்தமடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட விரும்பினள். கோதினே கன்னியாஸ்திரி பெருமகிழ்ச்சியுடன் ஜசிந்தாவைத் தன்மடத்தில் வரவேற்றாள். அவள் மடத்திற்சேர்ந்த சிறிதுநேரத்துக்குப்பின் ஒரு பெண அவளைப்பார்க்கச் சென்றாள். அவள் தனக்காகக் கடவுளைப் பிரார்த்திக்கும்படிகேட்டு ஏறக்குறைய எண்பது ரூபா அவளிடம்கொடுத்துப்போனள். அது கன்னியாஸ்திரியிடம் கொடுக்கப்பட்டது. இவ்விதம் சாப்பாட்டுச்செலவுக்கு முன்னதாகவே பணம்செலுத்தப்பட்டது.

மடத்துப் பிள்ளைகள்யாவரும் கோதினே கன்னியாஸ்திரியை "ஞானத்தாய்" என்று அழைத்துவந்தனர்., ஜசிந்தாவும் அவ்விதமே அழைத்தாள். அவள் மடத்திலிருந்தது பதினைந்து நாட்கள்தான். ஆனல், அவளுடைய இனிமை, பக்தி, பொறுமை, அடக்கம், செபம், விசேஷமாக அவளது ஆழ்ந்தநன்றி முதலியன எல்லோர் உள்ளத்திலும் பதிந்து அவர்களுக்கு ஓர்நன்மாதிரியாய் இருந்தன.

யேசுவசித்த வீட்டில், அதே கூரையின்கீழ் வசிக்கிறேன் என்றநினைவு அவளுக்கு அதிக மகிழ்ச்சி கொடுத்தது. அவரைப்பற்றி அடிக்கடி பேசுவாள். திவ்வியநற்கருணை உட்கொள்ள அதிகம் ஆசைப்படுவாள். அடிக்கடி கோவிலுக்குப்போய், நற்கருணைப்பேழையையே நோக்கினவண்ணமாய் நெடுநேரமாக இருப்பாள். இங்கு பலமுறை தேவதாய் அவளுக்குத் தோன்றினள். ஒருநாள் ஜசிந்தா படுத்திருக்கையில் கோதினேகன்னியாஸ்திரி அவளைப்பார்க்க வந்தாள். "ஞானஅம்மா, சற்றுப்பின்னர் வாருங்கள், தேவதாய்க்காக நான் காத்திருக்கிறேன்" என்று சொல்லித் தேவ அன்னைவரும் திசையையே உற்றுநோக்கினள். இவ்வித காட்சிகளுக்குப் பின் அவள் தன்சிந்தனைகளைக் கோதினே கன்னியாஸ்திரியிடம் வெளியிட்டு, அவைகளைத் தேவதாயே அறிவித்ததாகக் கூறினள். ஜசிந்தா முன் அறிவித்த பலசம்பவங்கள் நிறைவேறின.

ஜசிந்தாவின் சகோதரிகள் இருவர் கன்னியராக விரும்பினர். தாய்ஒலிம்பியா சம்மதிக்கவில்லை. அவ்விருவரும் சீக்கிரம் சாவார்களென்னக் கோதினேவிடம் ஜசிந்தா தெரிவித்தாள். பாத்திமாவுக்குச் செல்லக் கோதினேவுக்கு ஆசை. "அந்த ஆசை நிறைவேறும். ஆனல், என் மரணத்துக்குப் பின் மாத்திரம் நிறைவேறும்" என்றாள். "மோட்சத்தில் எனக்காகச் செபிக்கவேண்டும்" எனக்கேட்ட ஒருடக்றரிடம் "நீங்களும் சீக்கிரம் என்னைப் பின்செல்வீர்கள்" என்றாள். இன்னொருடக்றர் அவள் அருகில் வந்து தனக்காகவும், தன்மகளுக்காகவும் வேண்டிக்கொள்ளும்படி கேட்டார். அவ்விதம் செய்வதாக அவள்வாக்களித்து, சற்றுப்பின் "நீங்கள் இருவரும் என்பின் வருவீர்கள். முதலில் உங்கள்மகள், பின் நீங்கள்" என்றாள். இவைநிறைவேறின.

(தொடரும்)

## உன் குருவானவர்

தோமாஸ் போத்தகாமுரி, பெங்களூர் ஆண்டகை.

கடவுளின் தூதர் குருவானவர். கிறீஸ்துவின் பிரதிநிதி அவர். உன் ஞானமேய்ப்பர். உனக்கு வழிகாட்டி. உன் ஆத்துமதேவைகளைப் பூர்த்திசெய்பவர். தேவவாக்கை உனக்கு எடுத்தோதுபவர். திவ்வியபூசையை ஒப்புக்கொடுப்பவர். தேவதிரவியஅனுமானங்களை நிறைவேற்றுபவர். உனக்கு ஊழியஞ்செய்ய எப்போதும் தயாராயிருப்பவர். போதனையாலும், தமதுசாதனையாலும் ஆத்துமங்களை ஆண்டவரிடம் கொண்டுபோய்ச்சேர்க்க எல்லாவற்றையும் துறந்துவிட்டு, தமது வாழ்வையும், சுகத்தையும் ஆன்ம உழைப்பிற்கே அர்ப்பணஞ்செய்தவர். அன்னவரை ஆதரித்துக்காப்பாற்றவேண்டாமா? இல்லையேல், அவர்வாழ்வது தான் எவ்வாறு? தமது குருத்துவஅந்தஸ்தைக் கௌரவத்தோடும், கண்ணியத்தோடும் அவர் காப்பாற்றவேண்டும். தமது திருத்தொண்டைச் செவ்வனே அவர் ஆற்றவேண்டும். தமக்கென உணவு வேண்டும்; தகுந்த உடைவேண்டும்; ஏழைமக்கள் எத்தனையோபேர் அவர் உதவியைத் தேடி, அவரைநாடுகின்றனர். அதுமட்டுமல்ல, பெரியபங்குகளில் உதவிக்குருமார் உண்டு. கோவில் வேலையாட்களும் உண்டு. இன்னும் பள்ளிக்கூடங்களைக் கட்டவேண்டும். கட்டிஅவைகளை நடத்தவேண்டும். அனதைகளுக்கும், யாருமற்ற ஏழைகளுக்கும விடுதிகளை அமைக்கவேண்டும். இவ்வளவுஞ்செய்ய ஏராளமான பணச்செலவாகுமென்பது சொல்லாமலே விளங்கும்.

குருவானவர் கிறீஸ்தவர்களின் ஞானத்தந்தை. பெற்றோருக்குக் கடமைப்பட்டிருக்கும் பிள்ளைகளைப்போல கிறீஸ்தவர்களும் குருவானவருக்குக் கடமைப்பட்டுள்ளனர். அவருக்கு மரியாதை செய்யவேண்டும். ஏனென்றால், கிறீஸ்துவின் பிரதிநிதியாகநின்று அவருடைய சத்தியத்தையும், கற்பனைகளையும் அவர் எடுத்தோதுகிறார். அவரைநேசித்து ஆதரிக்கவேண்டும். ஏனென்றால், அவர்மூலமாக ஞானவரங்களை ஆண்டவர்நம்மேல் பொழிகிறார். "உங்களுக்குச்செவிசாய்ப்பவன் எனக்குச் செவிசாய்க்கிறான்; உங்களைநிந்திப்பவன் என்னை நிந்திக்கிறான்" என்று ஆண்டவரேதம்அப்போஸ்தலர்களுக்கு அருளியுள்ளார். (லூக். 10:16)

எனவே, ஞானமேய்ப்பர்களுக்கு உதவிசெய்வது ஒரு தர்மகாரியமல்ல. கண்டிப்பான கடமை. இக்கடமைக்குக் காரணங்கள்மூன்று: இயற்கைவிதி, தேவசித்தம், திருச்சபைக்கட்டளை. வரிகளைச்சுமத்துகிறது அரசாங்கம். முற்றிலும் அல்லது காலத்தோடு அவைகளைச் செலுத்தாவிட்டால் தண்டனையும்விதிக்கிறது. சுவிசேஷத்தைப் போதிப்பவர்கள் சுவிசேஷத்தின்மூலமாகவேவாழவேண்டும் என்பது ஆண்டவரின்கட்டளை. (1 கொரி. 9 : 14) "வேலையாளுக்குக் கூலிபெற உரிமை உண்டு" என்கிறார் நமதுஇரட்சகர். (லூக். 1[illegible] : 7) வருடவருவாயில் பத்தில் ஒருபங்கு கோவிலுக்குக் கொடுக்கவேண்டுமென்பது, பழைய ஏற்பாட்டிலே இருந்தசட்டம். அதே சட்டம் திருச்சபையின் ஆரம்பத்திலும் உலவிவந்தது.

வேதஆசீர்களைமட்டும் பெற்றுக்கொண்டுஅவைகளைப்பெறக் காரணமானகுருவையும், கோவிலையும் ஆதரிக்கவேண்டிய உன் கடமையை நீ அலட்சியஞ்செய்வது சரியல்ல. சிலதர்மகாரியங்களுக்கோ அல்லது ஏழைவிடுதிகளுக்கோ உதவிசெய்துவிட்டால் கடமை முடிந்துவிட்டது என்று சிலர் கருதலாம். ஆனல் கவனி! நீதிஎன்பது ஒருகடமை. தர்மம் நம்மிஷ்டம். அவனவனுக்கு நியாயமாகச் சேரவேண்டியதைக் கொடுப்பதே நீதி. தம் வாழ்விற்கு அவசியமானஉதவியைத் தமதுபங்குக் கிறீஸ்தவர்களிடமிருந்து பெறக் குருவானவருக்கு உரிமைஉண்டு. ஆதலால் அந்தஉதவியைக் கொடுப்பது கிறீஸ்தவனின் கடமை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## ருஷியாவுடன் யுத்தமின்றி வாழவே அமெரிக்கா விரும்புகிறது

— வடகரோலிஞ

"சுதந்திரநாடுகள் போதிய பாதுகாப்புப்பலம் பெற்று விளங்கினல், சோவியற்ருஷியாவுடன் யுத்தமின்றி உலகில்வாழ்வது சாத்தியம் என்பதே அமெரிக்காவின் நம்பிக்கை. இந்த நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே அதன்கொள்கையும் வகுக்கப்பட்டிருக்கிறது" என்று ஜனதிபதி ட்ருமன் வின்ஸ்றன்—சேலம் எனுமிடத்தில் பேசியபோது கூறியிருக்கிறர். அவர் மேலும் கூறியதாவது:

"நம்முடைய பாதுகாப்பு வளரவளரச் சோவியற்அரசுடன் நாம் நடத்தும் பேச்சுவார்த்தைகளும் வெற்றிபெற அனுகூலமாயிருக்கும். சமாதானமார்க்கமே தங்கள் நலனுக்கும் உகந்ததெனச் சோவியற்தலைவர்களும் உணரத் தலைப்படுவார்கள். அமெரிக்காவின் பாதுகாப்புத்திட்டம், அதுபிறநாடுகளுடன் செய்துகொள்ளும் பாதுகாப்பு ஒப்பந்தம் ஆகியவற்றின் அடிப்படை-இலட்சியம் சமாதானமே. இராணுவ பாதுகாப்பை விஸ்தரிப்பதானது யுத்தத்திற்கே அடிகோலுவதாகுமென இங்காட்டிலும் பிறநாடுகளிலுமுள்ள சிலர் கருதுகின்றனர். ஆனல் இந்தஅச்சத்திற்கு ஆதாரமில்லை. யுத்தம் கட்டாயம் வந்தேதீருமென்று நாம்கருதவில்லை.

"சுதந்திரஉலகின் இராணுவபலம் அதிகரிக்கஅதிகரிக்க, இராணுவத் தளவாடக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தி அதன்உற்பத்தியைக் குறைப்பதற்கான வழிதுறைகளை ஆராய்வதற்குச் சோவியற்அதிகாரிகள் உடன்படத் தலைப்படுவார்கள். இரண்டாவது உலகயுத்தம் முடிவடைந்ததும் இராணுவதளவாடங்களைக் குறைத்து, அவற்றின்உற்பத்தியையும் கட்டுப்படுத்துதற்கான ஒரு திட்டத்தை அமெரிக்கா வகுத்தது. ருஷியா அணுக்குண்டைச் செய்வதற்கு நெடுங்காலத்துக்கு முன்னரே அணுச்சக்திஆயுதங்களைக் கட்டுப்படுத்துதற்கானஒருதிட்டத்தை நாம்தயாரித்தோம். அத்திட்டம் நல்லபலன் அளிக்கக்கூடியது. அணுக்குண்டு யுத்தத்தினல் ஏற்படக்கூடிய பேரபாயத்தினின்றும் அது உலகைக் காப்பாற்றியிருக்கும். ஆனல் சோவியற் அரசு அத்திட்டத்தைஏற்கமறுத்துவிட்டது.

"அன்றும்சரி, இன்றும்சரி இராணுவதளவாடங்களை உற்பத்திசெய்யும் தொல்லையை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு, உலகசமாதானத்திற்கான வழியைச் செப்பனிடும்முயற்சியில் ஐ. நா. ஸ்தாபனத்தைச்சேர்ந்த நாடுகளுடனும், சோவியற்அரசுடனும் ஒத்துழைக்க நாம் முற்றுமேதயாராயிருக்கின்ருேம். சுதந்திரநாடுகளின் ஐக்கிய இராணுவபலம் அதிகரிக்க, சோவியற்தலைவர்களும் தங்களுக்கு எது நன்மைபயக்கும்என்பதை உணர்வார்கள். ஆக்கிரமிப்புத் திட்டங்களையும், போலிச் சமாதான பிரசாரங்களையும் மூட்டைகட்டி வைத்துவிட்டுச் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு அநுபவ சாத்தியமான நடவடிக்கைகளை நம்முடன் சேர்ந்து எடுக்கமுற்படுவார்கள். இந் நம்பிக்கை கைகூடும், அல்லது நமது கோரிக்கை ஈடேறும்என்பதற்கு எத்தகைய உத்தரவாதமும் என்னல் அளிக்கமுடியாது. முடிவு நம்மை மட்டிலும் பொறுத்த விஷயமல்ல. சோவியற் அதிகாரவர்க்கத்தினர் விரும்பினல் இவ்வுலகை இரத்தக்களரியில் அழ்த்தமுடியும். ஆனல் அமெரிக்கா மட்டும் இக்கொடியசெயலைச் செய்யாது."

## ஒருகோடி மக்கள் பலி

— வாஷிங்ரன்

"கம்யூனிஸ்தசீனவில் சுமார் ஒரு கோடிமக்கள் கம்யூனிஸ்த ஆட்சிப் பீடத்திற்குப் பலியாகியுள்ளார்கள். மற்றும் லட்சக்கணக்கானேர் உண்ண உணவின்றிப் பட்டினிகிடக்கின்றனர்" என்று சுதந்திரசீனவின் தொழிற்சங்கதலைவர் லூ-ஷிங்-ஷீ தெரிவித்துள்ளார். இவரும், திரு. டி. கே. ஜாங் என்பவரும் கம்யூனிஸ்த எதிர்ப்புத் தொழிற்சங்கத்தின் சர்வதேசப் பிரதிநிதிகள். அமெரிக்க தொழிற்தலைவர்களுடன் ஆலோசனை நடத்துவதற்காக வாஷிங்ரனுக்கு வந்துள்ளனர். திரு. லூ-ஷிங்-ஷீ மேலும் கூறுவதாவது: "சீனதேசம் மாவோசேதுங் வசமானதும், ருஷியாவுக்குத் தண்டம் சமர்ப்பிக்க அவர் காலங்கடத்தவில்லை. ஆதியில் அவர்செய்திருந்த வாக்குறுதிகளையெல்லாம் காற்றில் பறக்கவிட்டார். சர்வாதிகாரியைவிட மோசமாக நாட்டைச் சூறையாடவும், மனம்போன போக்கிலே மக்களைக் கொன்றுகுவிக்கவும் தலைப்பட்டார். பிற்போக்குச் சக்திகளைத் தண்டிப்பதற்கெனக் கம்யூனிஸ்தஅரசாங்கம் சென்ற மாசிமாதம் 21-ந் திகதி ஒருசட்டம் இயற்றியது. அதன்படி, தேசபக்திகொண்ட தொழிலாளரும், ஆதியில் தொழிற்சங்கங்களில் சேர்ந்து கடமையாற்றியவர்களும் கைதிகளாகி ஈட்டிமுனையில் விசாரணைசெய்யப்பட்டுத் தண்டிக்கப்படுகின்றனர். தண்டனையும், தீர்ப்பும் அநேகமாக ஒரே தன்மையாகவே இருக்கும். "கைதியைத் தூக்கிலிடுக" என்றே தீர்ப்பாகும். "கம்யூனிஸ்த கொள்ளைக்காரருக்குச் சிறிது பொழுதுபோக்கு வேண்டுமானல், கைதிகளை உயிரோடு பூமிக்குள்புதைப்பர். சிலரை ஐந்து எருதுகளுடன் பிணைத்து அவைகளை வெவ்வேறு திசைகளைநோக்கி இழுக்கும்படிசெய்வர். சிலரின்தோலை உரித்துவிடுவர். கம்யூனிஸ்தரின் அதிகார பூர்வமான அறிக்கைகளிலிருந்து 60,000தொழிற்தலைவர்கள் கொலைசெய்யவும், மற்றும் 5,00,000 பேர் கைதுசெய்யவும் பட்டதாகத் தெரிகிறது."

## ஞாபகார்த்த முத்திரைகள்

— வாஷிங்ரன்

ஐக்கியநாடுகளின் கொடியின் கீழ் கோறியாவிலே போராடும் 16 தேசங்களையும் கௌரவிக்குமுகமாகக் கோறியகுடியரசு ஞாபகார்த்த தபால் முத்திரைகளை வெளியிட்டுள்ளது. அமெரிக்காவிலுள்ள கோறிய ஸ்தானீகர் டக்றர் யு-ஷான்-யங் அவர்கள் இந்த முத்திரைகள்கொண்ட பலதாள்களை அமெரிக்கஜனதிபதி ட்றுமன் அவர்களுக்குப் பரிசளித்தார். கோறிய குடியரசின் தலைநகரான சவுலை ஐ. நா. படைகள் மீட்டதினமாகிய புரட்டாசிமாதம் 29-ந் திகதியன்று இந்த ஞாபகார்த்தமுத்திரைகள் வெளியிடப்பட்டதாக அவர் கூறினர். அவைகள் 16 கோவைகளாக வெளியிடப்பட்டுள்ளன. ஒவ்வோர் கோவையிலும் கோறியகொடியுடன் ஐ. நாடுகளைச் சேர்ந்த 16 நாடுகளின் கொடிகளில் ஒவ்வொன்று பதிக்கப்பட்டிருக்கிறது.

## அந்தநிலைமை ஏற்படாது

—மியாமி, புளோறிடா

"உலகிலுள்ள ஏனையநாடுகளுடன் சமாதானமாக வாழவேண்டும்என்பதே அமெரிக்காவின் ஆவலாயிருப்பதால், இராணுவபலத்தை அதிகரிப்பதில் அது இப்பொழுது மும்முரமாக ஈடுபட்டிருந்தாலும் அப்பலத்தை உபயோகிக்கவேண்டிய அந்தநிலைமை ஏற்படாதென்பதே அதன் நம்பிக்கையாகும்" என்று அமெரிக்கசேனையின் 33-வது வருடாந்த கூட்டத்திலே அமெரிக்க பாதுகாப்புமந்திரி ஜெருபேட் ஏ. லொவற் பேசியபோது குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

"இராணுவபலத்தை அதிகரிக்கச் செய்யும் முயற்சியைக் கைவிடுவதிலும் பார்க்க அதில் ஈடுபட்டிருப்பதின் மூலமே இராணுவபலத்தை உபயோகிக்கவேண்டிய நிலைமை எழாதபடி தடுக்கமுடியுமென்பதை நாமெல்லோரும் நன்குஅறிவோம். அணுச்சக்தியை உபயோகிக்கும் புத்தம்புதிய ஆயுதங்களை நமதுபடைகளுக்கு அளிக்கும்முயற்சியில் முன்னேறிவருகின்ருேம். அணுச்சக்தி ஆயுதங்களினல் யுத்தத்தை எளிதில் செயித்துவிடலாமென்று எண்ணுவது தவறு. பழைய ஆயுதங்களுக்கு அநுசரணையாகவே புதியஆயுதங்கள் அமைந்துள்ளன. நமதுநாட்டின்மேல் ஆக்கிரமிப்பு நிகழ்ந்தால் அச்சமயம் அணுச்சக்தி ஆயுதங்களினல்மட்டும் அதைத் தடுத்து நிறுத்திவிட முடியுமென்று எண்ணுவது பேதமையாகும்.

"நம்முடன்சேர்ந்த நாடுகள் எதிரிகளின் ஆக்கிரமிப்பினின்றும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவியளித்து வருகின்ருேம். ஆக்கிரமத்தை எதிர்ப்பதற்குச் சுதந்திர ஜனநாயக நாடுகள் எடுத்துள்ள இப்பொதுமுயற்சியானது அடிமைத்தளைகளினல் பிணைப்புற்ற சார்புநாடுகளின் அடிமைச்சேவகம் போன்றதல்ல. மனிதர்களின் உயிரைத் துச்சமாகமதிக்கும் எதிரிகளின் தந்திரோபாயங்களைச் சுதந்திர நாடுகள் பின்பற்றவில்லை. கைத்தொழில் விஞ்ஞானசக்தியையே நாம் பக்கபலமாகக் கொண்டுள்ளோம்."

## உங்களுக்குத் தெரியுமா?

### 1. அன்னஸ் என்பவன் யார்?

இவன் ஓர் வயதுசென்ற யூதகுரு. யேசுநாதர் யூதர்களால் பிடிபட்டதும் முந்தமுந்த இவனிடமே கொண்டு போகப்பட்டார். ஆனல், அவரை விசாரணைசெய்ய இவனுக்குஅதிகாரம் இருக்கவில்லை. என்ருலும் இவன் விஞேதப்பிரியனயிருந்து, மோசேசின் வேதப்பிரமாணத்தை மீறுவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த யூத வேதபாரகர்கள், பரிசேயர்களின் விரோதியானஅவரைக் காணவேண்டுமென்று வெகுவாக ஆசைப்பட்டிருந்தான். ஆனல், யேசுநாதரோ அவனேடு பேசவில்லை. அதனல் கைப்பாஸிடம் அவர் கொண்டுபோகப்பட்டார்.

### 2. கைப்பாஸ்என்பவன் யார்?

யேசுநாதர் பாடுபட்டு மரணித்த வருடத்திலே யூதர்களின் பெரிய குருவாயும், அவர்களது சுப்பிறீங் கோட்டுப் பிரதமநீதிபதியாயும் இருந்தவன். இந்தச் சுப்பிறீங்கோடு சனெட்றின் (Sanhedrin) என அழைக்கப்பட்டுவந்தது. அது பெரிய குருவைத்தவிர, எழுபது நீதிபதிகளையும் அடக்கியிருந்தது. அன்னஸ் என்னும் முதியகுரு இவனுடையமாமனே.

### 3. விசுவாசப் பரப்புதற்சபை எப்போது ஆரம்பமாயிற்று?

பிரான்சிலே லையன்ஸ்நகரில் வசித்திருந்த பவுலின் ஜறிக்கோஎனும் ஓர் இளம் பெண்மணியின் தனிப்பட்ட அரும்முயற்சியால் 1818-ம் ஆண்டு ஆரம்பமாயிற்று. தங்கள் செபங்களாலும், வாரந்தோறும் கிரமமாகக் கொடுக்கும் சிறியகாணிக்கைகளாலும் மிஷன்நாடுகளுக்கு உதவிசெய்ய விரும்பிய தனதுசிநேகிதிகளை ஒன்றுசேர்த்து இந்தச்சபையை இவள் ஆரம்பித்தாள். பின்னர் இது 1822-ம் ஆண்டு பரிசுத்தஸ்தானத்தாலே அங்கீகரிக்கப்படலாயிற்று.

### 4. "பெனெமெறென்ரி" மேடல்கள் ஏற்பட்ட வகையாது?

சிறப்பாக ஆற்றப்படும் பொதுசன சேவைகள், இராணுவ சேவைகளைப் பாராட்டிச் சன்மானிக்கப்படுகின்ற பாப்பரசரின் மகிமைவிருதுகளான இவைகள் 1832-ம்ஆண்டு 16-ம் கிறகோரியார்எனும் பாப்பானவராலே ஏற்படுத்தப்பட்டன.

இவற்றிலே பொதுசனசேவைமெடலின் முகப்பக்கத்தில் சிந்தூரமரஇலைகளின் முடிஒன்றால் சூழப்பெற்ற "பெனெமெறென்ரி"எனும் வார்த்தை பொறிக்கப்பட்டிருக்கிறன.

இராணுவசேவைமெடலின் ஒருபக்கத்திலே 16-ம் கிறகோரியாரின் உருவமும், மறுபக்கத்திலே பாப்பரசாது சின்னங்களின்கீழ் 'பெனெமெறென்ரி' எனும் வார்த்தையுடன்கூடிய அழகிய சுருள் ஒன்றைத் தாங்கிய சம்மனசும் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

இருமெடல்களும் பாப்பரசின் நிறங்களைக்கொண்ட நாடாக்களில் தொங்கவிடப்பெற்று மார்பிலே தரிக்கப்படுகின்றன.

### 5. பூனை எப்படி இருளில் பார்க்கின்றது?

பூனைக்கு அதன்மீசை இருளிலே பெரும் உதவியளிக்கின்றது. இம் மீசையின் உதவியால் அது வழியைக் கண்டுபிடித்துச் செல்கின்றது. மீசையின் அடியிலுள்ள நரம்புகளே அதன் மீசையானது பொருள்களில் முட்டுவதாலுண்டாகும் உணர்ச்சியை அறிவிக்கின்றன. அதன்கண்களும் அது இருட்டில் செல்வதற்கு உதவிபுரிகின்றன. அதன் கண்ணிலுள்ள கருவிழியைப் பெரிதாகவிரித்து உள்ளவெளிச்சத்தைவாங்கியும் அது பார்க்கக்கூடும். சிறிதும் ஒளிஇல்லாவிடில் அதுபார்க்க மாட்டாது.

### 6. பறவைகளின் முட்டைகள் ஏன் ஒரேநிறமாய் இருப்பதில்லை?

இயற்கை தனது அறிவைப் பல வகைகளில் காட்டுகின்றது. முட்டைகளை எடுத்து உண்ணும் எதிரிகளின் கண்களுக்கு முட்டைகள் எளிதிற் புலப்படாவாறு அவைகள் பலநிறமுடையனவாய் அமைந்துள்ளன. மணலில் அல்லது பாறைகளில் கூடு கட்டி முட்டையிடும் பறவைகளின் முட்டைகள் புள்ளிகளும், கோடுகளும் உடையனவாகஇருக்கும். இந்தநிறம் மணல், பாறை என்பவற்றின் நிறத்தோடு கலந்து தோன்றுவதால் முட்டை எளிதில் கண்ணுக்குப் புலப்படமாட்டாது. கூழாங் கற்களினிடையே முட்டையிடும் ஒருவகைப் பறவையின்முட்டை கூழாங்கல் நிறமாக இருக்கின்றது. வேலிகளில் முட்டையிடும் பறவைகளின் முட்டைகள் பச்சைநிறமாகவிருக்கும். மறைவானபொந்துகளில் இடும்முட்டைகள் வெண்மையாயிருக்கும். பாறைகளில் இடப்படும் முட்டைகள் வட்டமாயிருப்பதற்குப்பதில் ஒருமுனை கூருடையதாயிருக்கும். இவ்வாறிருப்பது அது ஒடுங்கிய கற்பாறைகளின் சரிவுகளிலிருந்து உருளாமல் இருப்பதற்காகும்.

### 7. வெள்ளை யானை வளர்ப்பு என்பது என்ன?

ஒருகாரியம், வருவாய்க்குரியதாய் இராமல் அதிக பொருட்செலவுடையதாய் இருக்குமானல் நாம் அதனை "வெள்ளையானை வளர்ப்பு"என்கிருேம். வெள்ளையானை சீயம், பர்மா முதலிய நாடுகளில் புனித விலங்காக வளர்க்கப்படுகிறது. வேலைசெய்வதற்குப் பயன்படுத்தப்படுவதில்லை. அதனை வளர்ப்பதற்கு அதிக பொருட்செலவு உண்டு.

---

—ஓர் சுவிற்சர்லாந்தரான 25 வயசுடைய எம். ஜோர்ஜெஸ் அன்ட்றேசார் எனும் பொழுதுபோக்குவிமானி சென்ற 5-ந் திகதியன்று 65 குதிரைப் பலவேகமுள்ள ஓர் பைப்பர் விமானத்தில்பறந்து ஐரோப்பாவில் மகா உன்னதமான—14,106 அடி உயரமான மொண்பிளாய்ங்சிகரத்தின்மீதுஇறங்கியிருக்கின்ருர். கடந்த 30 வருடங்களிலே முதன்முதலாக அச்சிகரத்தின் மேல் இறங்கியவர் இவர்தானும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### பிரபல சினிமாநடிகர்

இற்றைக்குப் பத்துவருடங்களின்முன் பிரபல நாடகபாத்திரமாயும், சினிமா நடிகராயும் விளங்கியவரான ஜோஸ் மொஜிக்கா அவர்கள் பெருநாட்டின் தலைநகரான லீமாவிலுள்ள அர்ச். பிரான்சீஸ்குவின் ஆச்சிரமத்திலே ஓர் சந்நியாசியாராக இன்று துறவறவாழ்க்கைநடத்தி வருகின்றார். பத்துவருடங்களின்முன் 150 டலர் பெறுமதியுள்ள விலைபெற்ற உடைகள் தரித்துவந்த இவர் தற்போது பிரான்சீஸ்குவின் சபைக்குரிய சாதாரணஉடை தரித்திருக்கின்றார். இவர் ஹொலிவூட்டிலே ஓர் சினிமாநடிகராகச் சேருமுன் சிக்காகோவிலும், சான்பிரான்சீஸ்கோவிலும் இருநாடகக் கம்பெனிகளில் சேர்ந்திருந்தார்.

### மகிமையான ஞாபகசின்னம்

பாப்பானவராகத் தெரியப்பெற்றபொழுது வெனிஸ்நகரின் பத்திறியாக்குவாக விளங்கியிருந்த முத். பத்தாம் பத்திநாதருக்கு மகிமையான ஓர் சின்னமாய் வெனிஸ்நகரிலுள்ள முப்பதினாயிரம் தொழிலாளர்கள் வசிக்கப்போதிய வீடுகளைக் கொண்டதாய்ப் புறநகர்ஒன்று கட்டப்படவிருக்கிறது. இந்தப் புறநகர் தனது மத்தியதானமாகப் பங்குவிசாரணைக் கோவிலைக் கொண்டிருக்கும். மற்றும் அதனைச்சேர்ந்த கட்டடங்கள், மற்றும் நகரசங்க கட்டடங்கள் ஆதியவற்றிற்கும் இடங்கள் ஒழுங்குபண்ணப்படும். வீடுகளுக்குத் தேவையானநிதி ஏற்கனவே கிடைக்கக்கூடியதாய் இருப்பதால் விரைவிலே வேலை தொடக்கப்படவிருக்கிறது.

### தலைநகரின் முதற்கல்லூரி

ஆஸ்திறேலிய சாம்பிராச்சியத்தின் தலைப்பட்டணமான கன்பறாநகரிலே இம்மாசம் 14-ந்திகதி ஞாயிறுவாரம் முதற் கத்தோலிக்க கல்லூரிக்கு அஸ்திபாரக்கல் ஆசீர்வதித்து நாட்டப்படலாயிற்று. கிறிஸ்தியன் பிறதர்மாராலே நடத்தப்படவிருக்கும் இந்தக்கல்லூரி ஓர் யுத்தஞாபக கல்விச்சாலையாய் இருந்துவரும். இதனைக்கட்டிமுடிக்க ஏற்படும் செலவுமதிப்பு பதினறுலட்சம் ரூபாவாகும். இதிலே 500 மாணவர்கள் கல்வி பயிலப்போதிய இடவசதியிருக்கும். பிறதர்மாரின் மடம் கல்லூரிமைதானத்தில் அமைக்கப்படவிருக்கிறது.

### அறியப்படாதிருந்த கருதினல்

பாத்திமா திருசேத்திரத்தில் நடந்தேறிய உத்தியோக பூர்வமான பரிசுத்தவருடமுடிவுவிழா வைபவத்திற்குப் பாப்பரசரின் மகாப்பிரதிநிதியாகச் சென்றிருந்த கருதினல் ரெடெஸ்சினி ஆண்டவர் தாம் ஓர் கருதினல் என்பதை அறியாமலே மூன்று வருடம் ஓர்கருதினலாக இருந்துவந்தார். பதினோராம் பத்திநாத பாப்பானவர் 1933-ம் ஆண்டு பங்குனிமாதம் இவரை ஓர் கருதினலாக்கினர். ஆனல், மதிரித் நகரிலே அவர் பின்னரும் தொடர்ந்து பாப்பரசின் ஸ்தானீகராக இருந்துவரவேண்டுமென ஆசித்தவராய் அந்தரங்கமாக அதனை வைத்திருந்து, பின்னர் 1935-ம் ஆண்டு மார்கழி மாதம் நடந்தேறிய கருதினல்மார் திருச்சங்க கூட்டத்திலே கருதினலாக அவரைப் பிரசித்தமாக அறிவித்து, மூன்று வருடங்களின் முன்னர் அந்தரங்கமாக நியமனம் செய்யப்பட்டதாகவும் தெரிவித்துக்கொண்டார்.

### சினிமாச்சாலை கோவிலாயிற்று

ஆஸ்திரியாவின் எல்லைப்புறத்திலே பேர்ஜ்ரெஸ்காடனுக்குச் சமீபமான ஒபேர்சால்ஸ்பேர்க் எனும் ஹிற்லரது மலைவாசமாளிகையிலே அவரது பிரத்தியேக சலனபடக்காட்சிச்சாலை இடிக்கப்பட்டு, அதிலிருந்தசெங்கற்கள், ஓடுகள், மற்றும்கட்டட சாமான்கள் ஆதியன மூனிச் நகரிலே ஓர் புதியகத்தோலிக்க கோவில் கட்டுவதற்கு உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப்புதியகோவில் அந்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் வொன்போல் காபர் ஆண்டவரால் சிலதினங்களுக்குமுன் பிரதிட்டைசெய்யப்படலாயிற்று இந்தச்சாமான்கள் ஹிற்லரின் மாளிகையை துண்டுதுண்டாகப் பெயர்தெடுப்பதை மேற்பார்வைசெய்த அமெரிக்கஅதிகாரிகளால் புதியகோவிலுக்கு உபகரிக்கப்படலாயின. இந்தக் கோவிலே யுத்தம்முடிந்தபின் தெற்கு ஜேர்மனியில் கட்டியெழுப்பப் பட்டிருக்கும் மிகப் பெரியகோவிலாகும். ஆறுயிரம் பேரை அடக்கப்போதிய இந்தக்கோவில் யேசுவின் திருஇருதயத்தின் நாமத்தைத் தாங்கியிருக்கின்றது.

### யுத்தஞாபக சம்பவங்கள்

இரண்டாவது உலகயுத்தம் முடிவடைந்த காலத்திலே சில பெருஞ்சம்பவங்கள்நிகழ்ந்த திகதிகள் பலருக்கும் ஆச்சரியத்தை விளைப்பனவாகும். (1) 1943-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 8-ந் திகதி தேவமாதா பிறந்த திருநாளன்று இத்தாலி சரணடைந்தது. (2) 19:5-ம்ஆண்டு வைகாசிமாதம் 8 ந்திகதி பொம்பே மாதாவின் திருநாளன்று திரு. சேர்ச்சில் அவர்கள் ஜேர்மனி நிபந்தனையில்லாமலே சரணடைந்ததையும், யுத்தம்முடிவடைந்ததையும் உலகுக்கு அறிவித்தார். (3) 1945-ம ஆண்டு ஆவணிமாதம் 15-ந்திகதி தேவமாதாவின் மோட்சாரோபணத் திருநாளன்று யப்பானும் நிபந்தனையில்லாது சரணடைந்தது. (4) 1951-ம்ஆண்டு புரட்டாசி மாதம் 8-ந்திகதி தேவமாதா பிறந்ததிருநாளன்று சான்பிரான்சிஸ்கோ நகரிலே யப்பானிய சமாதான உடன்படிக்கைக்குக் கைச்சாத்திடப்படலாயிற்று.

# கத்தோலிக்கு எழுத்தாளர் மகாநாடு

## தூத்துக்குடியில் நடைபெறும்.

—:—

இந்தஆண்டு டிசம்பர் திங்கள், 27, 28, 29-ம் நாட்களில் தூத்துக்குடியில் கத்தோலிக்குத் தமிழ்எழுத்தாளர் பேரவை கூடப்பெறும். இந்தியாவில் கத்தோலிக்கு வரலாற்றில் முதன்முதலாக இப்பொழுதே இத்தகைய பேரவையொன்று கூடுகின்றது. தமிழ்இலக்கியக் கழகத்தின் ஆதரவில் கூடுகின்ற இந்தஎழுத்தாளர் பேரவை, கத்தோலிக்கு இலக்கியவரலாற்றில் புதுவழிகளை வகுத்து, புதுஇயக்கங்களைத் தோற்றுவிக்குமென நம்புகின்றோம். அண்மையில் நிகழ்ந்த கழகஆட்சிக் குழுவின்கூட்டத்தில் இந்தியா, இலங்கை, மலாயா நாடுகளில் தமிழ்வழங்கும் மேற்றிராசனங்களில் வாழ்கின்ற கத்தோலிக்கு எழுத்தாளர், பதிப்பாளர், வெளியீட்டாளர் அனைவரையும் பேரவைக்கு வரவழைக்க வேண்டுமெனவும், கழகத்தின் சிறப்புக்காவலராய் விளங்கும் மேற்றிராணிமார் யாவருக்கும், உறுப்பினர் அனைவருக்கும் அழைப்பு அனுப்ப வேண்டுமெனவும் முடிவுசெய்தனர்.

எழுத்தாளர் பேரவையில் உறுப்பினராய்க் கலந்துகொள்ள விரும்புவோர், முன்னரே பெருநூல்களேனும், சிறுநூல்களேனும், குறைந்த அளவு சிலகட்டுரைகளேனும வெளியிட்டிருத்தல் வேண்டும் என்பதூஉம் தெளிவுறுத்தப்பட்டது. பேரவைக்கூட்டத்திற்கு வருவோர் அனைவரும் தமிழ்இலக்கியக் கழகத்தின் விருந்தினராய் இருப்பர். கூட்டங்கள் 27-ம் நாள் மாலைப்பொழுது தொடங்கி, 29-ம்நாள் மாலைப்பொழுது முடிவுறும்

ஆறு வேளைக்கூட்டங்கள் நடைபெறுவன. அவற்றில், பெருந்தகுதிவாய்ந்த எழுத்தாளர் உரைநிகழ்த்துவர். கத்தோலிக்கு வெளியீடுகளின் அமைப்பு, கத்தோலிக்கு இலக்கியங்களைப் பரவச்செய்தல், கத்தோலிக்கு எழுத்தாளர்பயிற்சி, கத்தோலிக்கு நூற்கூடஇயக்கம், கற்றோருக்கு அறிவுரை, இன்னோரன்ன பொருள்பற்றி உரைநிகழ்த்தப்படும். இவ்வாண்டினது பேரவையின் பொதுக்கருத்து, கத்தோலிக்கு எழுத்தாண்மை வளர்ச்சியும், கத்தோலிக்கு வெளியீடுகளின் முன்னேற்றமுமாம்.

பொதுக்கூட்டங்கள்தவிர, பதிப்பாளர், வெளியீட்டாளர், விற்பனையாளர் முதலானோர் தனித்தனியே சிறப்புக்கூட்டங்களும் நடத்த ஏற்பாடுசெய்யப்படும். 1948-ம்ஆண்டு கழகம்தோன்றிய நாள்முதல் இதுகாறும் தமிழில் வெளியாகியுள்ள முதன்மையான கத்தோலிக்கு நூல்களின் ஆசிரியர்களுக்குப் பேரவையின்பெயரால் பரிசுகள் வழங்கப்படும். கத்தோலிக்கு வெளியீட்டாளரும், எழுத்தாளரும், பரிசுபெறுவதற்குத் தகுதியான நூல்களை முன்னரே அனுப்பிவைக்கலாம். பேரவைக்கு வரவிரும்புகின்றவர்களும், பிறரும் அடியிற்கண்ட முகவரிக்கு, பேரவையைப்பற்றிய தம்கருத்துக்களை எழுதித்தெரிவிக்கலாம். வருகின்றவர்கள் தங்கள்வருகையை முன்னரே தெரிவிப்பார்களாயின், விருந்தோம்பற்பணியை ஏற்றுநடத்தும் நண்பர்களுக்கு உதவியாகும்.

## அழைப்பு

—:—

தகுதியான வணக்கத்துக்குரிய மேற்றிராணியார் பிரான்சிஸ் ரோச் ஆண்டவர்அவர்களும், தமிழ்இலக்கியக் கழக ஆட்சிக்குழுவினரும், மேலே குறித்தநாட்களில் தூத்துக்குடியில்கூடும் இப்பேரவைக்கு வருமாறு, தமிழ் இலக்கியக்கழகச் சிறப்புக்காவலர், உறுப்பினர் முதலியோர் யாவரையும் மனமுவந்து அழைக்கின்றனர்.

முகவரி அமைச்சர், கத்தோலிக்கு எழுத்தாளர்பேரவை,

C/o தமிழ் இலக்கியக் கழகம்,

52, புதுக்கிராமம், தூத்துக்குடி.

### ஒரே கிறிஸ்துவநாடு

சமீபத்திலே ஸ்பெயினுக்கு விஜயஞ்செய்திருந்த பிலிப்பைன்ஸ் குடியரசுநாட்டின் கத்தோலிக்க பிரசாதிபதியான திரு. குய்றினோஅவர்கள் அங்கு பேசியபோது, தம்முடையநாடுதான் "தூரகீழ்தேசங்களிலுள்ள ஒரேயொருகிறிஸ்துவநாடு" என வர்ணித்துக்கூறினர். அங்கே இவர் கேடிஸ்நகர்சேர்ந்து ஸ்பானிய வெளிநாட்டுமந்திரியாரான ஆட்ராஜோஸர்கன் சமேதராய் ஆர்ப்பரித்து வாழ்த்திநின்ற சனத்திரளினூடாக ஆசனக்கோவில்சென்றபோது, அங்கே இவர் சேமமாகவந்து சேர்ந்ததையிட்டுத் "தெதேயும்" எனும் தோத்திரகீதம் பாடப்படலாயிற்று.

### "புதிய கிறிஸ்துவ தலைவர்"

பலவருடங்களாகக் கம்யூனிஸ்தர்களாலே "எங்கள் பிரதாபம் வாய்ந்த தலைவர்" என்று வாழ்த்தப்பட்டுவந்த ருஷியசர்வாதிகாரியான ஸ்ராலின் "இப்போது எங்கள்பெரிய கிறிஸ்துவ தலைவரும்" ஆகியிருக்கின்றார் என்று இப்போது சிலர் கூவுகின்றனர். கிழக்கு ஐரோப்பாவைச்சேர்ந்த கம்யூனிஸ்தநாடுகள் "பெரியவிசாறியோனைவிற்ச்ஸ்ராலினின் தலைமையிலே ஓர் புதிய கிறிஸ்துவ உலகம் ஆகியிருக்கின்றன" என்று செக்கோசிலவாகியநாட்டுக் கம்யூனிஸ்த அரசாங்க சுகாதார மந்திரி புளொஜார் கூறியிருக்கின்றான். நாஸ்திகனை ஸ்ராலின கிறிஸ்துவதலைவனாய் இருப்பதுஎப்படியாகும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**ஐப்பசிமாதம் 1951**

| | | | |
|---|---|---|---|
| வெ | 26 | அர்ச். எவரிஸ்தார் | (சி) |
| சனி | 27 | அர்ச். விஞ்சேஞ்சியார் | (ஊ) |
| ஞா | 28 | இஸ்பிரீத். ஆகமன. பின்வரும் 28-ம் ஞாயிறு — கிறீஸ்து இராசா திருநாள் | (வெ) |
| திங் | 29 | அர்ச். நர்சிசியார் | (சி) |
| செவ் | 30 | அர்ச். மார்செல்லியார் | (ப) |
| புத | 31 | அர்ச். குயந்தீனப்பர் | (ஊ) |

**கார்த்திகைமாதம் 1951**

| | | | |
|---|---|---|---|
| வியா | 1 | சகல அர்ச்சியசிஷ்டர்கள் திருநாள் | (வெ) |


# சத்தியவேத பாதுகாவலன்

1951-ம் ஆண்டு
ஐப்பசிமாதம் 25-ந் திகதி


## இக்கால தீமைகள்பற்றிப் பரிசுத்த பாப்பரசரின் சாதாரண நிருபம்

ஆசாரத்துக்குரிய சகோதரரே! உங்கள் அனைவருக்கும் சுகம்விரும்பி நமது அப்போஸ்தலிக்க ஆசீர்வாதம் அருளுகின்றோம்.

தேவபராமரிக்கையின் நியமனத்தாலே பேதுருவானவரின் பிரதமசிம்மாசனத்துக்கு நாம் உயர்த்தப்பெற்ற காலமுதல் மனிதவர்க்கத்தின் சுகதுக்கங்களைத் தேவனுடையதாயாரான மரியாயின் திருக்கரங்களில்ஒப்படைக்க நாம்ஒருபோதுமே தவறியதில்லை. நீங்கள் நன்றாய் அறிவதுபோல, இந்தநோக்கத்துடன் நாம் பற்பலசந்தர்ப்பங்களிலே நன்மதிபுகட்டும் திருமுகங்களை எழுதியிருக்கின்றோம்.

ஆசாரத்துக்குரிய சகோதரரே! உலகின் சகலபகுதிகளிலுமிருந்து கிறீஸ்துவமக்கள் எத்துணை உற்சாகத்தோடும், எத்துணை திடசித்தமாகவும், ஏகசிந்தையோடும் நமது வேண்டுகோள்களுக்குப் பதிலளித்தார்கள்என்பது நீங்கள் அறிந்ததே.

### மகத்தான அத்தாட்சி

இது, மகிமைப்பிரதாபம் வாய்ந்த பரலோக இராசாவின் மட்டிலே கொண்டுள்ள விசுவாசத்தினதும், பக்திபற்றுதலினதும் பிரத்தியட்சமான காட்சிகளாலே பற்பலசந்தர்ப்பங்களின்போதும், எல்லாத்துக்கும்மேலாகச் சென்றவருடம் அர்ச். பேதுருவானவரின் மகாலயமைதானத்திலே பிரமாண்டமான விசுவாசிகள் குழாம் சூழ்ந்திருக்க, பரிசுத்த தேவதாயார் பரலோகத்துக்கு ஆரோபணமானதைப் பயபக்தியுடன் ஆடம்பரமாகப் பிரகடனஞ் செய்தபொழுது நமது சொந்தநேத்திரங்களே காணக்கூடியானவாய்ச் சர்வசாதாரணமாய்க் காணப்பட்ட குதூகலகாட்சியின்போதும் ஓர் மகத்தானவகையிலே அத்தாட்சிப்படுத்தப் பட்டிருக்கிறது.

நம்மாலே இந்தவிஷயங்களின் ஞாபகமானது அருமைபாராட்டப்பெற்று, தேவனுடையஇரக்கத்திலே திடமாக நாம் மிகுந்த நம்பிக்கைவைக்கச் செய்யுமாஞல், பிதாவுக்குரிய நமது ஆத்மத்தை வியாகுலமடையச்செய்து அங்கலாய்ப்பிலே அதை வைத்திருக்கும் ஆழ்ந்தகவலைக்குரிய காரணங்களும் இந்தக் காலத்திலே இருந்துவருகின்றன.

உண்மையாகவே, ஆசாரத்துக்குரிய சகோதரரே! நம்முடையகாலத்தின் துக்ககரமான நிலைமையை நீங்கள் அறிவீர்கள். அத்துணை நெடுங்காலமாகப் பிளவுபடுத்தப்பட்டிருக்கும் தேசங்களின் சகோதரத்துவ ஐக்கியமானது இன்னுமே திரும்பவும் ஸ்தாபிக்கப்பட்டில்லை. அதற்குமாருக எங்கெங்குமே ஆத்துமாக்கள் குரோதத்தாலும், போரித்தனங்களாலும் கவிழ்த்துக் குலைக்கப்பட்டிருக்கக் காண்கிறோம். புதியனவும், இரத்தப்பிரவாகமுமான யுத்தங்களின் அச்சுறுத்துகையானது பயமுறுத்தப்பட்டமக்களுக்குமேலாக இன்னுமே வட்டமிட்டுத்திரிகின்றது.

இத்துடன் வேதகலாபனையின் உக்கிரபிரசண்டமாருதமும் சேர்க்கப்பட வேண்டும். இதுதிருச்சபைக்குமாருக நெடுங்காலமாய் நடத்தப்பட்டுவந்து சகலவகையான அபவாதங்களுடனும், வேதனைசஞ்சலங்களுடனும் கூடியதாய், சிலசமையங்களிலே வேதசாட்சிகளின் குருதிபாயும்படி செய்துதானும் குரூரமாக அதனைத் தாக்கிவருகின்றது.

தங்கள் முன்னோர்களின் வேதவிசுவாசத்தைத் தள்ளிவிடுவதற்கும், இந்த அப்போஸ்தலிக்க ஸ்தானத்துடனே தங்களைப்பந்திக்கின்ற ஐக்கியபந்தனங்களை இனிமேலில்லையென்ற தங்கள் நிர்ப்பாக்கியமாகத் துண்டித்துவிடுவதற்குமாகப் பலபந்தப்படுத்துமாறு அந்தநாடுகளிலே நமதுபுத்திரர்களுள் அநேகருடைய ஆத்துமங்கள் எவ்வளவு பெரிய—எவ்வளவு பெருந்தொகைப்பட்ட பாதகமும், கபடதந்திரமுமான பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கின்றன?

### நவமான பழிபாதகம்

அல்லாமலும் நவமான ஓர் பழிபாதகத்தைப்பற்றி மிகுந்த கவலையுடன் எடுத்துக்கூறாமல் மவுனஞ்சாதிக்க முடியாது. இதைப்பற்றிச் சகலகுருமாரினதும், பெற்றோரினதும், பொதுசனஅதிகாரிகளினதும் கவனத்தை ஈர்ந்துகொள்ள ஆசிக்கின்றோம்.

பிள்ளைகளின் தூய்மையான ஆத்துமங்களைச் சேதமாக்கும்படியாக எங்கெங்குமே தீயவர்கள் நடத்திவருகின்ற அக்கிரமமான இயக்கத்தையே நாம் இங்கு குறிப்பிடுகின்றோம்.

மாசற்றசிறுவர்களைத்தானும் அவர்கள் தப்பிப்போகவிடவில்லை. சமயத்தினதும், சனசமூகத்தினதும் தாபரமாய், திருச்சபையினது ஞானநந்தாவனத்தின் மகாஅலங்காரமான புஷ்பங்களாக விளங்கும் தேவதொண்டர்களைத்தானும் தைரியங்கொண்டு சிதைத்துவிட அந்தோ! துணிகின்றார்கள். இதைப்பற்றி ஒ[illegible]ஞல், தேவ[illegible] சுமையின்கீழ் நசுங்குண்டு மக்கள் அழுதுபிரலாபிப்பதும், இன்னும் மிகப்பெரிய உபத்திரவங்களினது மயக்கத்தின் கீழ் இருப்பதுமாகிய உண்மை அதிக வியப்பை உண்டு பண்ணுது.

ஆனல், ஆபத்துகள் அவ்வளவாக நிறைந்துள்ள நிலைமையைப்பற்றிய சிந்தனைகள் உங்கள் ஆத்துமங்களை, ஆசாரத்துக்குரியசகோதரரே! தளர்ந்துபோகச் செய்துவிடப்படாது. அதற்குப்பதில் "கேளுங்கள், கொடுக்கப்படும்; தேடுங்கள், கண்டடைவீர்கள்; தட்டுங்கள்; திறக்கப்படும்" என்ற திவ்விய போதனையை மனதிலே இருத்திக்கொள்ளுங்கள்.

### அடைக்கலம்

கிறீஸ்துவமக்கள் ஆபத்துக்காலத்தில எப்போதுமே அடைக்கலத்தைக்கண்டடைந்த தேவதாயாரை நோக்கித் திடசித்தத்தோடும் மிகுந்த நம்பிக்கையோடும் உங்கள் இருதயங்களை உயர்த்துங்கள். ஏனெனில், அவரே மனுக்குலமுழுவதினதும் தஞ்சமாகத் தம்மை ஆக்கிக்கொண்டார்.

இந்தநியாயத்தை முன்னிட்டு, மகிழ்ச்சிக்குரிய முன்னுத்தேசத்தோடும், புத்துயிர்பெற்ற நம்பிக்கையோடும் இந்த ஐப்பசிமாதத்தை நாம் நோக்குகின்றோம். இந்தமாதத்திலே விசுவாசிகள் வழமையில் பரிசுத்த செபமாலையைச் சாதனமாகக்கொண்டு தேவதாயாருக்குத தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்காக எல்லாக் கோவில்களையும் அதிகம்அடிக்கடி சந்திக்கிறார்கள். இந்தச் செபம் இன்னும் அதிகமான பக்திவைராக்கியத்துடன் செய்துவரப்படவேண்டும். இது நம்முடைய விருப்பமாகும். ஏனெனில், அதிகரித்துவரும் தேவைகளையிட்டு இது வேண்டப்படுகிறது.

தேவதாயாரின் மாதாவுக்குரிய ஒத்தாசையை அடைந்துகொள்ளச் செபமாலைக்குள்ள பெரிய வல்லபம் நமக்கு நன்றாகத் தெரிந்ததே.

இந்தஒத்தாசையை அடைந்துகொள்ள ஒன்றுக்குமேற்பட்ட செபமுறை இருந்தபோதிலும் பரிசுத்தசெபமாலையானது மகாசித்திகரமான சாதனம் என்பதை நாம் விசுவசிக்கிறோம். மனுமுறையைக் காட்டிலும் அதிகம் தெய்வீகமாயுள்ள இதன் ஆரம்பத்தைக்கொண்டும், அனுசாரத்தைக்கொண்டும், அதன் கருத்தடக்கமான தன்மையைக் கொண்டும் இது தெளிவாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

திவ்வியகர்த்தரின் செபத்தையும், சம்மனசுகளின் மங்களவாழ்த்தையும்பார்க்க அதிகம் பொருத்தமானவைகளாய், அதிகம் அழகானவைகளாய் என்ன செபங்கள் இருக்கின்றன? இந்த மங்களவாழ்த்தாகிய புஷ்பங்கள் கொண்டு செபமாலையென்ற இந்தஞானமுடி செய்யப்பட்டிருக்கின்றது. இந்தவாய்ச்செபங்களுடன் தேவஇரகசியங்களைத் தியானிப்பதையும் சேர்ப்பதாலே ம[illegible] பெரும்பலன் [illegible]கொள்ளப்படுகிறது.

அதாவது சகலரும்—அதிகம் சாதாரணமாகவும், மிகவும் சொற்பமாகவும் படித்தவர்கள் தானும்—தங்கள் விசுவாசத்தை வளர்க்கவும், காப்பாற்றவுமாகத் தீவிரமும், இலகுவுமான ஓர்வகையிலே இப்பலனை அடைந்துகொள்ளுகிறார்கள்.

(தொடரும்.)

## சுதேசவர்த்தமானம்

### கல்லூரிப் பரிசளிப்புவிழா

சம்பத்திரிசியார் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா நேற்றுப் பிற்பகல் கல்லூரிமண்டபத்திலே பெருந்திரளானபெற்றோரும், ஆசிரியர், மாணவர்களும், மற்றும் பிரபலஸ்தர்களும் சமூகமாக அதிபரிமளிப்பாக நடந்தேறியது. செவாலியர் சேர் சிற்றம்பலம் காடினர் அதற்குத் தலைமை வகித்தனர். அவர்பாரியார் பரிசில்களை வழங்கினர். அத்தருணம் உயர் மேடையிலே இவர்களுடன் கல்லூரி அதிபர், நீதியரசர் சென்கிளேயர் சுவான், வடமாகாண ஏசன்றர், வட பெரும்பாக வித்தியாதரிசி, அதிவண. விக்கார் ஜெனறல்சுவாமியார், வண. சாள்ஸ் மத்தியூஸ்சுவாமியார் ஆதியோர் அமர்ந்திருந்தனர். கல்லூரி அதிபர்சுவாமியாரால் கவர்ச்சிகரமான வருடாந்த அறிக்கைப்பத்திரம் வாசிக்கப்பட்டதும், விழாத்தலைவர் நிகழ்த்தியசொற்பொழிவிலே கல்லூரியின் முன்னேற்றத்தைப்பாராட்டி, கல்வி சம்பந்தமாகப் பெற்றோருக்கும், மாணவர்களுக்கும் அரியநன்மதிகள் புகட்டினர். லேடி காடினர்அவர்களால் பரிசில்கள் வழங்கப்பெற்றபின் மாணவர்களின் இனிய சங்கீதவிழாவோடும் நகைச்சுவைதேங்கும் டிருமாவோடும் பரிசளிப்புவிழா சிறப்பாக முடிவுற்றது.

### சபாநாயகரின் வரவு

பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையின் ஸ்பீக்கர் அதாவது சபாநாயகரான திரு. அல்பேட் எம். பீரிஸ்அவர்கள் சென்ற 22-ந்திகதிதிங்கட்கிழமை காலை கொழும்பிலிருந்து ஆகாயவிமானத்திலே காங்கேசன்துறை விமான நிலயத்தில் வந்திறங்கியபோது யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிகள்வகுப்பு மாணவர்கள்சங்கத்தின் தலைவர் திரு. ஆர். நாகராசாஎன்பவரும், மற்ற அங்கத்தினர்களும் காத்துநின்று அவரை வரவேற்றார்கள். நம்மேற்றிராணியாண்டவரும், சென்ற்றர் எஸ். ஆர். கனகநாயகம, பரமேஸ்வரக் கல்லூரிஅதிபர் திரு. எஸ். நடேசன் என்பவர்களும் அங்கு சமூகமாயிருந்தார்கள். அன்றுபிற்பகல் சபாநாயகர் மேற்கூறியசங்கத்தின் வருடாந்தவிருந்திற்குச் சமூகமளித்தனர்.

### புங்குடுதீவில் மாட்டுரோகம்

புங்குடுதீவு கிழக்கிலே கிராமச்சங்க எட்டாம், ஒன்பதாம் வட்டாரங்களில் மாட்டுரோகமுண்டாய் இதுவரை அநேகமாடுகள் பாடுகாட்டிவிட்டன. அவைநோய்உண்டாகி இரண்டுமூன்று மணித்தியாலத்தில் இறந்துவிடுகின்றன. அதனுல் யாழ்ப்பாணத்திலிருந்து மிருகவைத்தியர் அழைக்கப்பட்டிருக்கின்றார். விரைவிலே மாடுகளுக்கு ஊசிமூலம் மருந்துசெலுத்தப்படுமெனத் தெரியவருகிறது.

### ஓர்நாள் பிரயாணம்

வருகிறதைமாசத்திலே லண்டனிலிருந்து எகிப்திய கெய்றோநகருக்கும் கமெற்-ஜெற் ஆகாயவிமானப் பிரயாணம் ஆரம்பமாகவிருக்கிறது. அதன்மேல் லண்டனுக்கும்-சிங்கப்பூருக்குமிடையே இந்தவிமானப்பிரயாணம் ஆரம்பமாகும். பிந்த இந்தவிமானங்கள் இலங்கையையும் சந்தித்துப் போக ஒழுங்குசெய்யப்படுமானல் அடுத்தவருடத்திலே இலங்கையிலிருந்து ஒருநாளிலே லண்டன்நகர் போய்ச் சேரக்கூடிய வசதி ஏற்படுமென்று சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவின் மகிமை

நாம் வாழஉண்ணுகிறேமா? அல்லது உண்ணவாழ்கிறேமா? இந்தப் பாழும் வயிற்றுக்காகத்தானே இத்தனை பாடும் என்ற வார்த்தைகள் நிதமும் காதைச்செவிடாக்குகின்றன. அதனால் ஓர் அமெரிக்க உணவியல்அறிஞரும் "உலகபோராட்டங்களில் பாதியாவது உணவால் உண்டாவது" என்று கூறினார். வாழ்க்கைக்கு உயிர்அளிக்கும் உணவு இல்லாத போதுதான் "வாழ்க்கையே உண்பதற்குத்தான்; நாம உண்பதற்காகவே வாழ்கின்றேம்" என்ற மனப்போக்கு நமக்குண்டாகிறது. ஆனால், திருப்தியான உணவுகிடைத்து உடல் பூரிப்புறும்பொழுது "உணவு முக்கியமானதன்று. வாழ்க்கைதான் முக்கியம்; நாம் வாழ்வதற்காகத்தான் உண்கின்றேம்" என்ற உயர்ந்தஉண்மை உதிக்கின்றது. தேவையான உணவின்றித் தவம்கிடக்கும் இக்காலத்திலே "செவிக்குணவில்லாதபோழ்து சிறிது வயிற்றுக்கு மீயப்படும்" என்ற வள்ளுவர்வாக்குச் சற்றே தலைகீழாகத்தான் தோன்றும். வயிற்றைப்பார்த்த பின்தான் மனத்தைத்திருத்தமுடியும். இவ்வுண்மையை உணர்ந்துதான் "உடலினை உறுதிசெய்" 'ஊண்மிக விரும்பு' "மூப்பினுக் கிடங்கொடேல்" என்று புரட்சிக் கவிஞன்பாரதி தமது புதியஆத்திசூடியில் எழுதினார்போலும்!

வாழ்க்கையின் முக்கியதேவைகள் உணவும், உடையுமேயாம். ஆரோக்கியவாழ்விற்கு அடிப்படையானது சத்துணவு. உணவு வயிற்றிற்குமாத்திரமல்ல, அது நிலவும் உள்ளத்திற்கும், உடலுக்கும்உயிரையளித்து, அவற்றை உறுதியாகப் பிணைத்து வாழ்க்கையை வனப்புறவைக்கிறது. ஆண்மையும், வீரமும்வளர்ந்து அறிவு சுடர்விட்டு எங்கும்நிறைந்துஉலவ உதவுவதுஉணவுதான். நமது சிந்தனைகள், செய்கைகள், விருப்பங்கள் யாவும் தேகத்தின் பலஉயிரணுக்களின் மின்சாரதாக்குதலாலும், கவர்ச்சியாலும் பிறக்கின்றனவென்பது இன்றைய விஞ்ஞானிகள் கண்டறிந்தஉண்மை. இத்தகைய மோதுதல்களுக்கு அவசியமான மூலப்பொருட்கள் அடங்கிய தாதுக்களையும் (Lons) உயிர்ச்சத்துகளையும் (Vitamins) உயிருக்குஉரியவேளைளில் உதவுவது நாம் உண்ணும் உணவுதான். ஒரு நாட்டில் எவ்வளவுக்கெவ்வளவு உணவியலறிவு பெருகி அத்துறையில் சிறந்தஆராய்ச்சிகள் அதிகரிக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அந்நாட்டில் வளமும், சுகமும், வாழ்க்கைத்தரமும், கல்விஅறிவும், மேம்பாடும் மேன்மையடையலாம். வாழ்க்கையின் சகல பருவங்களிலும்—கருப்பையிலுள்ள சிசு தொடங்கிவயதுமுதிர்ந்தகிழம்வரையிலும் உணவானது ஊட்டத்தால் ஆற்றலைத்தருகின்றது. உணவு அளிக்கும் ஆக்கத்தால்வாழ்க்கையின் முழுப்பயன் கிட்டுகிறது. உணவுக்கும், சுகவாழ்வுக்குமிடையிலுள்ள இடைவிடாதநெருங்கியஇந்தத்தொடர்பைக் கண்டுபிடித்துச் சரியானஉணவுஎன்ன என்பதை மனிதனுக்குக் காட்டியுள்ள விஞ்ஞான வெற்றியின் முக்கியத்துவத்தை விபரிப்பதரிது. இவ்வெற்றியின் சிறந்ததோர் பண்பென்னவெனில், மற்றவிஞ்ஞான வெற்றிகள்போலன்றி இதில் அழிவுக்கிடமில்லை. ஆக்கமே நோக்கம். உணவுச்சத்துக் குன்றும்போது உடற்கட்டுச்சிதைந்து, வளர்ச்சிதேய்ந்து, உற்சாகங்குறைந்து, பார்வைமங்கி, மனநிம்மதிகுலைந்து, மகிழ்ச்சியும்மறைந்துவிடுகிறது. நாட்டின் சுகமே மிகவும் சுருங்கிவிடுகிறது.

மக்லெஸ்றர்என்றபெரியார் சொல்லுகிறார். "ஒருநாட்டைக் காவல்செய்யும் சேனையின் மனோவன்மையைக் காவல் செய்வது உணவு" என்று. இதை மனதிற்கொண்டுதான் ஐக்கியநாடுகளின் விவசாயப்பகுதியினரும் "உலகசமாதானத்திற்கு முதற்படி உலகமக்களுக்குப் போதியஉணவைச் சாதிப்பதாகும்" என்று வற்புறுத்தியுள்ளனர். உயிருக்கும், உடலுக்கும் இன்றியமையாத சுகத்தைத்தருகின்ற உணவானது சக்தியளித்தல், உடலெனும் மனையைக் கட்டுதல், உடற்கூறுகளின் தொழில்களைக் கண்காணித்தல்ஆகிய முக்கிய தொழில்களைப் புரிகிறது.

(தொடரும்)

அர்ச். பதுவை அந்தோனியாரின்

## தரும அப்பம்

கோடியற்புதரும், வறியவர்களின் அன்னதாதாவுமாகிய அர்ச். பதுவை அந்தோனியாரின் தருமஅப்பம் என்னும் இந்நூல் காலஞ்சென்ற வண. ஜே. இப்பொலித்துச் சுவாமியவர்களால் இயற்றப்பட்டது. நமது அச்சியந்திரசாலையிலிருந்து ஆறும்பதிப்பாக வெளிவந்திருக்கிறது. அர்ச். பதுவை அந்தோனியாரின் சரித்திரச்சுருக்கம், அவர் கோடிஅற்புதர், அவர் வறியவர்களின் அன்னதாதா, அவரிடத்தில் மன்றாடிக் கேட்கிறதென்ன? வறியவர்களின் தருமஅப்பமென்னும் நற்கிரியையின் ஆரம்பமும், வளர்ச்சியும், தருமஅப்பநேர்த்திகளால் நடந்தேறிய அற்புதங்கள், அர்ச். அந்தோனியார் ஆபத்துக்குஉதவுகிறவர், கள்வரைக் காட்டிக்கொடுக்கிறவர், இக்கட்டையும், முட்டுப்பாட்டையும் அற்புதமாகத் தீர்க்கிறவர் என்பனவெல்லாம் இதிலே துலக்கமாகவும், அவ்வர்ச்சியசிஷ்டரிலே உருக்கமானபத்தியை உண்டுபண்ணக்கூடிய அத்துணைசிறப்பாகவும் எடுத்துக்காட்டப் பட்டிருக்கின்றன. இன்னும் செவ்வாய்க்கிழமைப் பத்தியைப்பற்றிய விபரங்கள், செவ்வாய்க்கிழமைதோறும் அர்ச். அந்தோனியாரின் திருச்சுரூபத்துக்குமுன்பாகச் செய்யத்தக்க மன்றாட்டுகள், அவர்பேரால் நவநாட்செபங்கள், அவரின் பதின்மூன்று மகிமைப்பிரதாபங்கள், அவரது சுருக்கமானபிரார்த்தனை, விரிவான பிரார்த்தனை, மற்றும்செபங்கள், பாக்கள்ஆதியனவும் இதிலே அழகாக இடம்பெற்றிருக்கின்றன. 144 பக்கங்கள்கொண்ட இந்நூல் நல்லகாகிதத்திலே கவர்ச்சிக்குரியமாதிரியாய் அச்சிடப்பெற்றுள்ளது. அர்ச்.அந்தோனியாரின் பக்தர்களுக்கெல்லாம்— அவர் சலுகையை நாடுவாருக்கெல்லாம் — அவரிடம் உபகாரசகாயங்களைப் பெற்றவர்களுக்கெல்லாம் இது மதித்தற்கரிய ஓர் பொக்ஷம்போன்றது.

எவ்வரத்தைக் கேட்டாலும் ஏழைகளுக் கன்னமிடச்
செவ்வழியாய் வாக்குறுதி செய்வீரேல் —அவ்வரத்தை
அந்தோனி யார்பிரிய மாய்அருள்வார் என்பதைநீர்
சிந்தைசெய்து கொள்வீர் செகத்து.

விலை பிரதி ரூபா 1. தபாற்செலவு சதம் 30.

கிடைக்கும் இடம்:

அர்ச். சூசைமாமுனிவர்
அச்சியந்திரசாலை
யாழ்ப்பாணம்

வத்திக்கானிலே

## அமெரிக்க ஸ்தானீகர்

வத்திக்கான் இராச்சியத்துக்கு அமெரிக்க ஐக்கியதேச முதலாவது ஸ்தானீகராக ஜெனறல் மாக் டபிள்யு. கிளார்க்அவர்களை ஜனாதிபதி ட்றூமன் நியமனஞ்செய்திருக்கிறாரென வாஷிங்ரன் நகரிலிருந்து சென்றஞாயிற்றுக்கிழமை தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. அமெரிக்க பிரதிநிதிகள் சபையாலே அங்கீகரிக்கப் படுமிடத்து இந்தநியமனமானது, அமெரிக்கஐக்கியதேசம் பூரணவரிசையைச்சேர்ந்த ஸ்தானீகர்ஒருவரை முதன்முறையாக வத்திக்கானிலே [illegible] பதைக் க[illegible].

நியூயோக்நகர அதிசிறைக்கணக்கு அதிகாரியான திரு. மீறன் ரெய்லர் அநேகவருடங்களாக வத்திக்கானிலே அமெரிக்க ஜனாதிபதியின் விசேஷ பிரதிநிதியாய் இருந்துவந்தார். ஆனால் சிலகாலத்தின்முன் இவர் தம்முடைய பதவியை இராசிநாமாச் செய்துவிட்டார். இவர் ஒழுங்குமுறையான ஸ்தானீகருக்குரிய அந்தஸ்தைக்கொண்டிருக்கவில்லை.

தற்போது 56 வயதுடையவரான ஜெனறல் மாக் வேயின் கிளார்க்அவர்கள் இரண்டாவது உலகயுத்தம் முழுவதிலும் யுத்தகளத்திலே ஓர் அமெரிக்க சேனபதியாகச் சேவை புரிந்தார். 1944-ம் ஆண்டின் ஆனிமாதத்திலே நோமண்டியில் இரண்டாவது போர்முனை திறக்கப்பட்டதன் மேல் ஐந்தாவது அமெரிக்க சேனையையும், எட்டாவது பிரித்தானிய சேனையையும் அடக்கிய பதினைந்தாவது சேனைக்குழுவின் சேனபதியாக நியமனஞ்செய்யப்பெற்றார்.

## ஞானோபதேசப் பரீட்சைப் பேறுகள்—1950

### பாடத்திட்டம் A.

#### இல்லற ஆசிரியர் தலைமை வகிக்கும் பாடசாலைகள்

**S. S. C. வகுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | மிருசுவில் கலவன்பாடசாலை | பா. மேரி மில்றெட் புஷ்பராணி | புள்ளி—64 |
| 2-ம் பரிசு | வதிரி ,, | அ. எலிசபேத் | ,, —60 |

**J. S. C. வகுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | வதிரி கலவன் பாடசாலை | ஞா. போலின் ஜெயராணி | புள்ளி—60 |
| 2-ம் பரிசு | விடத்தற்தீவு ,, ,, | க. குருசுமுத்து | ,, —58 |

**7-ம் வகுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | மண்டைதீவு கலவன்பாடசாலை | இ. அன்னமேரி | புள்ளி—62 |
| 2-ம் பரிசு | தாளையடி கலவன் பாடசாலை | பா. ஸ்ரீவன் வேந்தர்கோன் | ,, —50 |

**6-ம் வகுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | புங்குடுதீவு கலவன் பாடசாலை | டே. அத்தனஸ் | புள்ளி—60 |
| 2-ம் பரிசு | யாழ்ப். சென் யேம்ஸ் ஆண்பாடசாலை | சி. அருளானந்தம் | ,, —56 |

**5-ம் வகுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | வல்வெட்டித்துறை கல. பாட. | செ. பேணுட் குணசிங்கம் | புள்ளி—70 |
| 2-ம் பரிசு | மாதகல் அர்ச். சூசையப்பர் ஆங்கிலபாடசாலை | A. A. W. ஜெயராசா | ,, —64 |

**4-ம் வகுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | சில்லாலை ஆண்பாடசாலை | செ. பிரான்சீஸ் சேவியர் | புள்ளி—92 |
| 2-ம் பரிசு | முருங்கன் கலவன்பாடசாலை | க. சந்தா | ,, —81 |

**3-ம் வகுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | கொழும்புத்துறை சஞ்சூசையப்பர் சாதனகழகம் | யோ. இம்மனுவேல் | புள்ளி—94 |
| 2-ம் பரிசு | பெரியவிளான் கலவன்பாடசாலை | ப. புஷ்பம் | ,, —93 |

#### சந்நியாச ஆசிரியர் தலைமை வகிக்கும் பாடசாலைகள்

**S. S. C. வகுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | நாரந்தனை பெண்பாடசாலை | ச. மேரி தீற்ரு | புள்ளி—83 |
| 2-ம் பரிசு | அச்சுவேலி அர்ச். திரேசா பெண்பாடசாலை | புனிதம் ஐயாத்துரை | ,, —66 |

**J. S. C. வகுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | யாழ்நகர் திரு. கன்னியர்மடம் தமிழ். | இ. மரியம்மா | புள்ளி—80 |
| 2-ம் பரிசு | இளவாலை ,, ,, ,, | மி. லில்லி புஷ்பம் | ,, —75 |

**7-ம் வகுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | பேசாலை கலவன்பாடசாலை | சி. செபஸ்ரியன் துரம் | புள்ளி—90 |
| 2-ம் பரிசு | கொழும்புத்துறை சஞ்சூசையப்பர் சாதனகழகம் | நா. டேவிற் | ,, —60 |

**6-ம் வகுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | முல்லைத்தீவு க. பாடசாலை | மி. ஞானசவுந்தரி | புள்ளி—76 |
| 2-ம் பரிசு | இளவாலை திரு. கன். மடம் தமிழ். | பெ. பொ. அ. நசரேத் | ,, —65 |
| | சில்லாலை பெண்பாடசாலை | ம. மேரி யோசேப்பின் | ,, —65 |

**5-ம் வகுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | பாஷையூர் கலவன்பாடசாலை | வி. அகத்தம்மா | புள்ளி—78 |
| 2-ம் பரிசு | யாழ்ப். சென் யேம்ஸ பெண்பாடசாலை | சி. சவிரியம்மா | ,, —73 |

**4-ம் வகுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | சில்லாலை பெண்பாடசாலை | வெ. இசபெல்லா | புள்ளி—94 |
| 2-ம் பரிசு | யாழ்ப். சென்மேரிஸ் கல. பாட. | அ. பிரான்சீஸ் சேவியர் | ,, —87 |
| | மாதகல் சென்தோமஸ் பெண்பா. | ச. லூர்து ஜேட்றூட் | ,, —87 |

**3-ம் வகுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | மயிலிட்டி கலவன்பாடசாலை | இ. விக்ரோறியா | புள்ளி—98 |
| 2-ம் பரிசு | பேசாலை கலவன்பாடசாலை | ச. அந்தோனிங்கம் குரூஸ் | ,, —96 |

### பாடத்திட்டம் B.

**5-ம் வகுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | உடுவில் கலவன்பாடசாலை | அ. மரியதாஸ் | புள்ளி—90 |
| 2-ம் பரிசு | செம்பியன்பற்று கலவன்பாடசாலை | பி. எட்மன்ட் | ,, —74 |

**4-ம் வகுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | தலைமன்னார் கலவன்பாடசாலை | அ. ஜெயமேரி திரேசா | புள்ளி—98 |
| 2-ம் பரிசு | சிலாபத்துறை கலவன்பாடசாலை | கி. மேரி ராணி | ,, —97 |

**3-ம் வகுப்பு**

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | மன்னார் எழுத்தூர் கலவன்பாடசாலை | செ. புஷ்பம் | புள்ளி—98 |
| 2-ம் பரிசு | அரிப்பு கலவன்பாடசாலை | பி. அந்தோனி குரூஸ் | ,, —96 |

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அர்ச் அந்தோனியாரிடம் யான்கேட்ட மன்றாட்டு அனுகூலமானதினால் அவருடையநாமம் புகழப்படும்படி இதை நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்

C. S. சந்தியாகு.

P.W.D., Bukit Timah,
$9\frac{1}{4}$ mile,
Singapore.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மேற்றிராசன சேமலாப சங்கம்

(1928-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது)

### வெளியீடு A.

**1950-ம் ஆண்டின் மார்கழிமாசம் 31-ந் திகதியோடு முடிவான வரவுசெலவு**

**விபர வெளியீடு**

| வரவு | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|
| **1950-ம் ஆண்டு தைமாசம் 1-ந் திகதி இருப்பு :** | | |
| ஈட்டில் | 122,080-00 | |
| இலங்கைச் சேவிங் வங்கியில் | 646-74 | |
| தபாற்கந்தோர் சேமநிதி வங்கியில் | 144-48 | |
| மேர்க்கன்ரையில் வங்கியில் C/A | 9,490-80 | |
| இலங்கை வங்கியில் C/A | 9,263-27 | |
| கையில் | 676-91 | 142,302-20 |
| மாதாந்த கட்டுப்பணம் | | 12,377-40 |
| வட்டி | | 6,544-74 |
| மொத்தம் ரூபா | | 161,224-34 |

| செலவு | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|
| **கருமநடாத்தற் செலவினம் :** | | |
| லிகிதர் சம்பளமும் மேலதிக வேதனமும் | 1,609-00 | |
| பணியாள் சம்பளமும் மேலதிக வேதனமும் | 514-00 | |
| அறைவாடகை | 240-00 | |
| கந்தோர் உபகரணம் | 139-82 | |
| அச்சிடல் | 360-75 | |
| முத்திரை | 193-00 | |
| கழிவு | 1-21 | |
| பரிசோதகர் உரிமை | 125-00 | 3,182-78 |
| தளபாடம் | | 40-00 |
| மரணஇலாப உபகரிப்பு | | 10,099-55 |
| நிச்சயிக்காத் தொகை (மரணஇலாப முற்பணம்) | | 300-00 |
| மரண உரிமை | | 63-35 |
| **1950-ம் ஆ. மார்கழி மீ 31-ந்உ இருப்பு :** | | |
| ஈட்டில் | 120,330-00 | |
| இலங்கை சேவிங் வங்கியில் | 662-86 | |
| தபாற் கந்தோர் சேமநிதி வங்கியில் | 147-28 | |
| மேர்க்கன்ரைல் வங்கியில்C/A | 16,324-37 | |
| இலங்கை வங்கியில்C/A | 9,849-02 | |
| கையில் | 225-13 | 147,538-66 |
| மொத்தம் ரூபா | | 161,224-34 |

பரிசோதிக்கப்பட்டுச் சரியென உறுதிப்படுத்தப்பெற்றது.

கைச்சாத்து : **C. N. தேவருயன்,**
பிரசித்த பரிசோதகர்.

யாழ்ப்பாணம், 9-7-1951.

கைச்சாத்து : **V. E. செருபிம்,**
சங்கபொக்ஷகர்.

### வெளியீடு B.

**1950-ம் ஆண்டின் மார்கழிமாசம் 31-ந் திகதியோடு முடிவான இலாப நஷ்ட வெளியீடு**

| பற்றுப்பக்கம் | ரூ. ச. |
|---|---|
| லிகிதர் சம்பளமும் மேலதிக வேதனமும் | 1,609-00 |
| பணியாள் சம்பளமும் மேலதிக வேதனமும் | 514-00 |
| அறைவாடகை | 240-00 |
| கந்தோர் உபகரணம் | 139-82 |
| அச்சிடல் | 360-75 |
| முத்திரை | 193-00 |
| கழிவு | 1-21 |
| பரிசோதகர் உரிமை | 125-00 |
| தளபாடமதிப்புக் குறைவு | 26-67 |
| இலாபம் | 5,246-59 |
| மொத்தம் ரூபா | 8,456-04 |

| வரவுப்பக்கம் | ரூ. ச. |
|---|---|
| கரும நடாத்துகை | 1,195-00 |
| வழியேட்டுப் பணம் | 8-75 |
| அபராதம் | 380-40 |
| வட்டி | 6,544-74 |
| உரிமை இழப்பு | 327-15 |
| மொத்தம் ரூபா | 8,456-04 |

பரிசோதிக்கப்பட்டுச் சரியென உறுதிப்படுத்தப்பெற்றது.

கைச்சாத்து : **C. N. தேவருயன்,**
பிரசித்த பரிசோதகர்.

யாழ்ப்பாணம், 9-7-51.

கைச்சாத்து : **V. E. செருபிம்,**
சங்கபொக்ஷகர்.

## யாழ்ப்பாண மேற்றிராசன சேமலாப சங்கம்

### வெளியீடு C.

**1950-ம் ஆண்டின் மார்கழிமாசம் 31-ந்திகதியோடு முடிவான மிகுதிப்பண வெளியீடு**

| உத்தரவாதப்பணம் | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|
| 1-1-'50-இல் அங்கத்தவர்களின் உரிமை மிகுதி | 87,266-69 | |
| மாதாந்தக் கட்டுப்பணமாகக் கூடியது | 12,377-40 | |
| நிச்சயிக்காத் தொகையிலிருந்து கூடியது | 1-00 | 99,645-09 |
| மரண இலாப நிதியாகக் கழிக்கப்பட்ட தொகை | 8,574-35 | |
| மரண உரிமையாகக் கழிக்கப்பட்ட தொகை | 1,888-55 | |
| கருமநடாத்தற்காகக் கழிக்கப்பட்ட தொகை | 1,195-00 | |
| வழியேட்டுக்காகக் கழிக்கப்பட்ட தொகை | 8-75 | |
| அபராதமாகக் கழிக்கப்பட்ட தொகை | 380-40 | |
| உரிமையிழப்பால் கழிக்கப்பட்ட தொகை | 327-15 | 12,374-20 |
| 31-12-'50-இல் அங்கத்தவர்களின் உரிமை மிகுதி : | | |
| 1-ம் வகுப்பு ரூ. | 28,532-70 | |
| 2-ம் ,, ,, | 47,684-56 | |
| 3-ம் ,, ,, | 11,053-63 | 87,270-89 |
| லிகிதர் பிணை | | 250-00 |
| நிச்சயிக்காத் தொகை | | 31-45 |
| சென்ற வருட இலாப இருப்புப் பணம் | 55,322-79 | |
| 1950-ம் வருட இலாபம் | 5,246-59 | 60,569-38 |
| மொத்தம் ரூபா | | 148,121-72 |

| உரிமைச்சொத்து | ரூ. ச. | ரூ. ச. |
|---|---|---|
| தளபாடம் | 309-73 | |
| பாவனைக்கழிவு | 26-67 | 283-06 |
| நிச்சயிக்காத் தொகை (மரணலாப முற்பணம்) | | 300-00 |
| ஈட்டில் | 120,330-00 | |
| இலங்கை சேவிங் வங்கியில் | 662-86 | |
| தபாற்கந்தோர் சேமநிதி வங்கியில் | 147-28 | |
| மேர்க்கன்ரைல் வங்கியில்C/A | 16,324-27 | |
| இலங்கை வங்கியில்C/A | 9,849-02 | |
| கையில் | 225-13 | 147,538-66 |
| மொத்தம் ரூபா | | 148,121-72 |

பரிசோதிக்கப்பட்டுச் சரியென உறுதிப்படுத்தப்பட்டது.

கைச்சாத்து : **C. N. தேவருயன்,**
பிரசித்தபரிசோதகர்.

யாழ்ப்பாணம், 9-7-51.

கைச்சாத்து : **V. E. செருபிம்,**
சங்கபொக்ஷகர்.

## நானாசங்கதிகள்

—இன்னும் பத்துவருடகாலத்துள் அணுச்சக்தி ஆகாயவிமானப்படை ஒன்றை அதாவது அணுச்சக்தியின் பலத்தைக்கொண்டு பறக்கும் ஆகாய விமானங்களை அமெரிக்கவாசு கொண்டிருக்குமெனத் தாம் எதிர்பார்ப்பதாக அமெரிக்க அணுச்சக்திக் கம்மிஷனின் தலைவரான திரு. கோடன் டீன் அவர்கள் தெரிவித்திருக்கின்றார். அமெரிக்க சனப்பிரதிநிதிகள் சபையின் வரவு செலவு உபகம்மிற்றியின்முன் வாக்குமூலம் அறிவித்தபோது இவ்விதம்கூறலாயினர்.

—அணுவைப்பிளந்து எடுத்தசக்தியைப்பற்றி இந்தத்தலைமுறைக்குத் தெரிந்ததெல்லாம் அதன் அழிக்கும் சக்தியே என்பதுதவறு; உண்மையிலே இந்தத்தலைமுறையில் அதுசெய்யப்போகும்நன்மை மிகப்பெரிது. அணுச்சக்தியால் தொழில்வளம் முன்னேறும்நாள் [illegible] அதிகம்தூரத்தில் இல்லை" என்று யேல் சர்வகலாசாலைப் பௌதிக துணைப் பேராசிரியர் பிறுங்லின் ஹிச்சின்சன் அவர்கள் கூறுகின்றார்.

—அமெரிக்க ஜனாதிபதியாயிருந்து காலஞ்சென்ற றூஸ்வெல்ற் அவர்களின் புதல்வரும், அமெரிக்கபாராளுமன்ற அங்கத்தவருமான பிறுங்லின் டி. றூஸ்வெல்ற் அவர்களுக்குப் பரிசுத்தபாப்பரசர் அளித்த பிரத்தியேக பேட்டியிலே, அமெரிக்க ஐக்கியதேசத்துடன் இராசீய உறவைத்திரும்பஏற்படுத்துவதற்கு வத்திக்கானுக்குள்ள விருப்பைத்தெரிவித்தாரென நம்பப்படுவதாய் றோமாபுரியிலிருந்து செய்திஎட்டியிருக்கிறது.

— பிரித்தானிய கம்யூனிஸ்தகட்சி சென்றமுறை பாராளுமன்றத் தேர்தலிலே 25 கம்யூனிஸ்தர்களை அபேட்சகர்களாக நிறுத்தியிருந்தது. ஆனால், இம்முறைத் தேர்தலில் பத்துப்பேரை மாத்திரம் அபேட்சகர்களாக நிறுத்தப்போவதாய் அறிவித்திருக்கிறது. பிரித்தானியிலே கம்யூனிஸ்தருக்கு நடப்பில்லையென்பது இதிலிருந்து [illegible]

***********************

### விஞ்ஞானியின்

## பொன்மொழி

"உடல்கூற்று நிபுணர்களிலும், மனநூல் நிபுணர்களிலும் தலைசிறந்தவர்கள் வழுவாத முறையில் எழுதிய கட்டுரைகளையெல்லாம் ஒன்றுதிரட்டி அவற்றின் தூய சாராம்சத்தைப் பிழிந்தெடுத்துக்கொண்டாலும், .... தூய விஞ்ஞான அறிவையெல்லாம் கடுகைத் துளைத்து எழுகடலைப் புகுத்தியதுபோலச் சிறந்த ஒரு புலவன் சுருங்க எடுத்துக் கூறுவதானாலும், அன்று அவர் (கிறீஸ்துநாதர்) மலைமீது அமர்ந்து செய்தருளிய உபதேசத்துக்கு அவையனைத்தும் இணையாகா."

டக்றர் ஜேம்ஸ் டக்கர் பிஷேர்
அ. ஐ. தேச மனநூல் நிபுணர்

***********************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணாவின் செய்தி

என் குஞ்சுக்குழந்தைகாள் !

அடுத்த ஞாயிற்றுக்கிழமை கிறீஸ்து தேவஇராசாவின் திருவிழா. கிறீஸ்துநாதர் எப்படி நம் அரசராய் இருக்கிறார்? எவ்விதம் அரசு புரிகிறார்? என்று உங்களுக்கு விளங்கப் படுத்துகிறேன்.

தருணத்திற்கு ஏற்ற பாட்டு ஒன்று "அமுது" எழுதியிருக்கிறார். அதைப் படிக்கும் பொழுது உங்கள் இளம் உள்ளங்களில் வீரமும், அபிமானமும் கொழுந்துவிட்டு எரியும்.

"கிறீஸ்து தேவராசா" என்ற தலைப்பின்கீழ் வருவது கிறீஸ்துநாதர் எப்படி எங்கள் அரசர்? அரசர் என்றால், அவர் மட்டில் நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? என்பதை விளக்கும். "சிவப்பு அபாயம்" என்பதை நீங்கள் கவனமாகப் படித்துக் கவனமாக நடக்க வேண்டும்.

எல்லாவற்றையும் படித்து இன்புற்றிருங்கள். சுபம்.

உங்கள் அன்புள்ள
அண்ணா.

## கிறீஸ்துதேவராசா

யேசுநாதர் நரதேவன். அதாவது தேவனும் மனிதனுமானவர். தேவ சுபாவமும், மனிதசுபாவமும் அவரிடத்தில் உண்டு. சருவேசுரன் என்ற அளவிலே யேசுநாதர் எங்கள் அதிபதியும், கர்த்தாவுமாய் இருக்கிறார்.

மனிதன் என்ற அளவிலும் அவர் எங்கள் அரசர். அவருடைய மனித சுபாவம் தேவ சுபாவத்துடன் ஒன்றித்து இருக்கிற படியாலும், தமது இரத்தத்தால் எங்களை இரட்சித்த படியாலும், பாவத்தின் அடிமைத் தனத்தில் நின்று நம்மை மீட்டபடியாலும் யேசுநாதர் எங்கள் அரசர். நாம் அவர் பிரசைகள். யேசுநாதர் மெய்யான அரசர் என்று வேதபுத்தகத்திலும் சொல்லியிருக்கிறது. கபிரியேல் அதிதூதன் கன்னி மரியம்மாளுக்கு மங்களம் சொன்னபோது அவரிடத்திலே பிறக்க விருக்கிற குழந்தை தாவீது அரசனின் சிம்மாசனத்தில் செங்கோல் செலுத்துவார் என்றும், "அவருடையஇராச்சியத்திற்கு முடிவு வராது" (லூக். 1) என்றும் சொன்னார். போஞ்சியு பிலாத்து "நீர் இராசாவோ" என்று கேட்ட கேள்விக்கு இரட்சகர் மறுமொழியாக "நீயே சொல்லிவிட்டாய்; நான் சத்தியத்திற்குச் சாட்சி சொல்லவே இந்த உலகத்திற்கு வந்தேன்" என்று திருவாய் மலர்ந்தார்.

யேசுநாதர் எப்படி அரசராய் இருக்க விரும்புகிறார்? எங்கள் புத்தியிலும், சித்தத்திலும் அரசராய் இருக்க விரும்புகிறார். அவர் எங்களுக்குப் படிப்பித்த போதனைகளை நாங்கள் விசுவசிக்கும்பொழுது அவரே எங்கள் புத்தியை ஆளுகிறார். யேசுநாதரை அறிந்தவர்கள் அவரை நேசியாமல் இருக்க முடியாது. அவர் நன்மை நிறைந்தவர். எங்களுக்கு எப்போதும் நன்மை செய்கிறவர். ஆகையால் நாம் அவரை எங்கள் இருதயம் எல்லாம் கொண்டு நேசிக்க வேண்டும். யேசுநாதரின் ஆட்சி ஞான ஆட்சி. நாங்கள் விசுவாசம் உள்ளவர்களாய் அவரை நேசிக்கும்போது அவரது இராச்சியத்திற்குச் சேர்ந்தவர்கள் ஆகிறோம்.

யேசுநாதர் எமக்குத் தரும் சட்டங்கள் பத்து. இவைகளை அனுசரிக்க அவசியமான ஞான உதவி வரப்பிரசாதங்களையும் அவரே தருகிறார். ஆகையால் பிரசைகளாகிய நாம் எங்கள் அன்பையும், அமைச்சலையும் அவருக்குக் காண்பித்துப் பிரமாணிக்கம் உள்ளவர்களாய் இருப்போம். கிறீஸ்து தேவ இராசா வாழ்க! அவருடைய இராச்சியம் வருக!!

## யேசு ராசன்

1

மண்ணிற் பிறந்திட்ட மன்னர்கள்—
வெறும்
மாநில ஆசையில் மாய்ந்தனர்
அண்ணலாம் யேசுக் கிறீஸ்துவோ—
உள்ளம்
ஆளும் திறத்தை அடைந்தனர்

2

வீட்டினை ஆளும் அரசனார்? — அன்பு
வெளிச்சம் கொழுத்திய வீரனார்?
கேட்டினில் பூமி கிடக்கையில் — துன்பக்
கேணியில் நின்றதை மீட்டதார்?

3

வேந்தர்கள் தோன்றி மறைந்தனர்—
அவர்
வீரச் செயல்களும் போயின
சாந்தம் தயை பிறர்நேசமே — யேசு
சற்குணன் சாவிலும் காட்டினான்.

4

வெற்றிப் புலிக்கொடி மீன்கொடி — தலை
சுற்றிக் கரணங்கள் போட்டதாம்
பற்றும் சிலுவைக் கொடியின்கீழ் —யேசு
பக்தர்கள் சேமமாய் வாழ்கிறோம்.

— அமுது

## நல் வாசினை

ஆபிரிக்காவிலே கிப்போபட்டணத்தில் ஓர் வீடு. அவ்வீட்டைச்சுற்றி ஒருசிறு தோட்டம். தோட்டத்திலுள்ள ஒருபெரிய மரத்தடியில் ஓர் வாலிபன் இருந்தான். அவன் தோட்டத்தின் வனப்பையும், அப்பொழுது வீசிக்கொண்டிருந்த தென்றல்காற்றையும், காற்றில் கலந்துவந்த பரிமள வாசனையையும் அனுபவித்துக்கொண்டு இருந்தான். ஆனால், அவன் யோசனையில் ஆழ்ந்திருப்பவன்போல் காணப்பட்டான். மனதை ஏதோ வருத்திக்கொண்டு இருந்தது. முகத்தில் கலை இருந்தது.

எங்கும் அமைதி. அமைதியைக் கலைத்தது ஒருசிறுவனின் குரல். "எடுத்து வாசி; எடுத்துவாசி என்று சத்தம்" கேட்டது. யாருடைய சத்தமென அங்கும் இங்கும் ஆராய்ந்து பார்த்தான். எவரையுமே காணவில்லை. திரும்பவும் அவ்வாலிபன் மரநிழலில் வந்து உட்கார்ந்தான். அதே குரல் திரும்பவும் கேட்டது. "எடுத்துவாசி; எடுத்துவாசி" என்றதைக் கேட்டதும், அது தன் மனப் போராட்டத்திற்கு ஓர் மறுமொழி என்று நினைத்து, உடனே எழுந்து வீட்டுக்குள் போனான். அங்கே இருந்த வேதாகமப் புத்தகத்தை எடுத்துத் திறந்தான். திறந்த இடத்தில் கண்ட வசனத்தை வாசித்தான். அது அவன் மனதை அருட்டியது. மனக் கண்களைத் திறந்தது. தன் பாவ நிலைபரத்தை உணர்ந்தான். உணர்ந்து அவன் மனந்திரும்பினான்.

அந்த வாலிபர் யார்? அவர் தான் நாம் வேத பாரகராகச் சங்கிக்கும் அர்ச். அகுஸ்தீன் என்பவர். அவர் இளம்பராயத்தில் வேதத்தைப் படிக்கவில்லை. "மனிக்கேயன்" என்ற பதித போதனையைப் பின்பற்றிவந்தார். தேவ உதவியால் முன்சொன்னபடி மனந்திரும்பியபின் வேதசத்தியங்களை நன்றாய்ப் படித்து, பரிசுத்தவானாகச்சீவித்தார். அவருடைய திருத்தமுள்ள சீவியத்தைக் கண்ட கிப்போபட்டணத்தார் தங்கள் மேற்றிராணியார் இறந்தபின் அகுஸ்தீனையே தங்கள் மேற்றிராணியாராகத் தெரிந்து கொண்டார்கள்.

பிள்ளைகளே! நல்வாசினையினால்வந்த பலனைக் கண்டீர்களே. நீங்களும் வேத அறிவிற்கும், சன்மார்க்க வளர்ச்சிக்கும் உரிய புத்தகங்களையும், பத்திரிகைகளையும் வாசித்துவாருங்கள். நீங்கள் வகுப்பில் கற்றுக் கொண்டதை ஞாபகப் படுத்திக் கொள்ளவும், அவைகளை விரிவாய் விளங்கிக் கொள்ளவும் நல்வாசினை அவசியம்.

உலகில் அநேக விதமான புத்தகங்கள் உண்டு. சில நல்லவை; மனதிற்கு நல்ல எண்ணங்களை உண்டு பண்ணுபவை; அவை நற்பழக்கங்களையும், நல் ஒழுக்கங்களையும் எங்களுக்குப் போதிக்கின்றன. வேறுசில உபயோகமற்ற கெட்ட புத்தகங்களும் உண்டு. மனதுக்கு நஞ்சை ஊட்டும் புத்தகங்களும் உண்டு. புத்தகங்களிலே உள்ள நன்மை, தீமைகளை இலேசாய்க் கண்டுபிடிக்க முடியாது. அதற்கு ஆழமான அறிவு அவசியம். அநுபவம் அவசியம். ஆகையால், பெரியவர்களிடம் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும். உங்கள் பெற்றோரும், ஆசிரியரும் இதில் உங்களுக்கு உதவியாய் இருப்பார்கள். நீங்கள் வாசிக்கும்பொழுது அன்னப் பட்சி தண்ணீரைத் தவிர்த்துப் பாலைப் பருகுவதுபோல் புத்தகங்களில் உள்ள நல்லகாரியங்களைத் தெரிந்து எடுத்துக் கொள்ளுங்கள்.

## சிவப்பு அபாயம்

நெருப்பு சிவப்பு நிறம். நெருப்பு அபாயம் உள்ளது. அது உலகத்தையே அழித்து விடும். காயத்திலிருந்து சிவப்புநிற இரத்தம் வடிகிறது. அது ஆபத்தானது. எட்டிப் பழம் சிவப்பு நிறம் உள்ளது. அதைச் சாப்பிட்டால் மரணம் சம்பவிக்கும். பொதுஉடைமைக்காரர் சிவப்புச் சட்டை அணிவார். அது ஆபத்துக்கு அறிகுறி அபாயத்திற்கு அடையாளம். ஆகையால் சிவப்புச் சட்டைக் காரரை அணுகாதே தம்பி.

* * *

* குறிப்பு :

அடுத்த வாரம் பாலர்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கும் கதை ஒன்று வரும். மாரிகாலத்தில் அவசியமான பொருள் ஒன்றைப் பற்றிப் பாட்டும் வரும்.


## உங்களைத்தான்!

உங்கள்வீட்டில் நடைபெறும் இராச்செபத்தில் தேவமாதாவின் பிரார்த்தனை இடம்பெறுகிறதா ?

'ஆம்' என்றால் நலமே; ஆனால், அதை அர்த்தம்விளங்கச் சொல்லுகிறீர்களா? என்பதைச் சற்று அலசி ஆராயுங்கள். உதாரணமாக, 'அத்தியந்த விரத்தியாயிருக்கிற மாதாவே', 'தருமத்தினுடைய கண்ணாடியே', 'தேவஇரகசியத்தைக் கொண்டிருக்கிற ரோசாவென்கிற புஷ்பமே', 'தாவீதுஇராசாவினுடைய உப்பரிகையே'...இவைபோன்ற புகழுரைகளின் அர்த்தம் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா ?

புதிதாக வெளிவந்துள்ள

**" மரியன்னையின் புகழ்மாலை "**

என்னும் அழகியநூல்
இக்குறையை நீக்கிவைக்கும்.

**வாங்கி வாசியுங்கள்! வாசித்து யோசியுங்கள்!**

பலபடங்களைத் தாங்கிமிளிரும், 300 பக்கங்கள்கொண்ட இந்நூலின் விலை (தபாற்செலவு உட்பட) ரூபா 2 சதம் 50 மட்டுமே.

கீழ்க்கண்ட முகவரிக்கு உடனே எழுதுக :

**Rev. Bro. P. Arockiaswamy,**
Papal Seminary,
KANDY.


## இஸ்பிரீ. ஆக. பின்வரும் 24-ம் ஞாயிறு

### கிறீஸ்து இராசா திருநாள் சுவிசேஷ வாசிப்பு

(அரு. 18: 33—37)

அக்காலத்தில் பிலாத்துயேசுநாதரைநோக்கி: நீ யூதர்களுடைய இராசாவோ? என்று வினவினான். யேசுநாதர் மறுமொழியாக: நீராய் இதைச் சொல்லுகிறீரோ, அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இதை உமக்குச் சொன்னார்களோ? என்றார். பிலாத்து பிரதியுத்தாரமாக: நான் யூதனோ? உன்சனமும் பிரதான ஆசாரியர்களும் உன்னை எனக்குக் கையளித்தார்கள்; நீ என்ன செய்தாய்? என்றான். யேசுநாதர் மறுவுத்தாரமாக: என் இராச்சியம் இவ்வுலகத்துக்கு அடுத்ததல்ல; என் இராச்சியம் இவ்வுலகத்துக்கு அடுத்ததானால் நான் யூதர்களுக்குக் கையளிக்கப்படாதபடி என் ஊழியர் மெய்யாகவே போராடியிருப்பார்கள்; ஆனால், இப்போது என் இராச்சியம் அவ்விடத்துக்கு அடுத்ததல்ல என்று திருவுளம்பற்றினார். அப்போது பிலாத்து அவரை நோக்கி: அப்படியானால், நீ இராசாவோ? என்றான். யேசுநாதர் மறுமொழியாக: நான் இராசா என்று நீரே சொல்லுகிறீர்; நான் சத்தியத்துக்குச் சாட்சிசொல்லும்படியாகப்பிறந்தேன்; அதற்காகவே உலகத்துக்குவந்தேன். சத்தியத்தைச் சார்ந்தவன் எவனும் என்குரலொலியைக் கேட்கிறான் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mal. No. 520. Eng.

## விஞ்ஞான முறையான
# மலேரியாக் கட்டுப்பாடு

இரண்டாவது உலகயுத்தம் முடிந்த பின்னர் ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்தில் ஓர்பகுதியாய் உலகசுகாதார ஸ்தாபனம் நிறுவப்படலாயிற்று. இந்த ஸ்தாபனம் நோய்களைஎதிர்த்துப் போராடி வெற்றிகொள்வதிலே பெருந் திட்டங்களை வகுத்திருக்கின்றது. இது விஷயமாய் அதிகஞ்சிறந்த விசாரணையைப் பெறத்தக்கதாக உலகம் ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், இந்தப்பிரச்சினைகள் உலகின் வேறுவேறான பகுதிகளிலே வேறுவேறாக அமைந்திருக்கின்றன.

உதாரணமாக, உபஅயனுந்தநாடுகளிலும், அயனுந்தநாடுகளிலும் பயங்கரமான ஓர்அளவிலே பரம்புகின்ற ஓர்நோயாகிய மலேரியாவுக்குச் சாக்கிரதையானகரிசனை செலுத்தப்படவேண்டியிருக்கிறது. வருடந்தோறும் லட்சக்கணக்கானபேர்களைப் பலிகொள்ளுகின்ற இந்தநோய் அனேப்பிலெஸ்என்றநுளம்பால் பரந்துவருகின்றது. இந்தநோய் சுகத்துக்குக் கெடுதியாய் இருப்பது மாத்திரமல்ல ஆனல், அதன்பரவுகையாலே ஒரு தேசத்துக்கோ அன்றேல் ஒருசாகியத்துக்கோ உரியதாய் அது இருந்துவருகின்ற நாடுகளில் பொருளாதார நிலைமைகளை நிலைகுலைத்தும்விடுகின்றது. ஏனெனில், மலேரியா தொழிலாளரின்சக்திகளைக் குறைத்து, அதனல் அவர்கள் அடிக்கடி எடுத்து வரும் சுகஓய்வுகளாலே உற்பத்தி தடைப்படுத்தப்படுகிறது.

உலக சுகாதாரஸ்தாபனம் நிறுவப்படமுன்னர்தானும் மலேரியாப்பிரச்சினை கடுமையாக ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது. முந்தியசர்வதேசசங்கத்தின் அதிகம்நிபுணத்துவம் வாய்ந்த மலேரியாக்கம்மிஷன் இந்தத்துறையிலேஆராய்ச்சி நடத்தியது. இந்த ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டு 1938-ம்ஆண்டு அதுவெளியிட்டஅறிக்கையிலே மலேரியா வராமல் தடுப்பதற்கும், அதைக் குணப்படுத்துவதற்கும் குயினைன் பாவனை சிபாரிசுசெய்யப்பட்டிருக்கிறது. இந்த மருந்து மலேரியாக்கால முழுவதும் தினமும் 400 மிலிக்கிறும் பாவிக்கும்போது மலேரியா வராமல் தடுக்கின்றது. இன்னும்குயினைனை மலேரியா காணுமிடத்து 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 1 கிறும்முதல் 1·3 கிறும்வரையில் பாவிக்குமிடத்து மிகச் சிறந்த மருந்தாகின்றது.

உலகின் அயனுந்த—உபஅயனுதந் பகுதிகளில் வசிக்கும் சனங்களுக்கு முந்தியமலேரியாக் கம்மிஷனின் இந்த ஆலோசனைகள் இன்னுமே மிகவும் விசேஷப்பட்டனவாய் இருக்கின்றன.

# மரணசங்கதி

மன்னர்ப்பிரிவிலே காத்தாங்குளவாசராய், மன்னர்—மாதோட்டப் பகுதியிலே நன்கறியப்பெற்றவராய், நாடகப்பாக்கள் இயற்றுவதிலே சிறந்த பயிற்சியுள்ளவராய், சுமார் 15 வருடகாலம் கமவிதானையாராய், மாந்தை டி. ஆர். ஒ. காரியாலயத்தில் லிகிதாகத் கடமையாற்றிவரும் திரு. எஸ். ஸ்ரனிஸ்லாஸ் என்பவரின் தந்தையாய் விளங்கியிருந்த திரு. அந்தோனி செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் விருத்தாப்பிய நோய்கண்டு அந்தியதேவதிரவிய அனுமானங்களைப்பெற்றுத் தமது 67-ம் வயதிலே சென்ற 12-ந்திகதி மரணத்திரையில் மறையலாயினர். வாழ்க்கையிலே அமைதியானபோக்கும், குன்றாதேவபக்தியும் இவரில்சிறந்திருந்தன. மறுநாள் இவர் பிரேதமானது பெரும்தொகையான இனசனர் சிநேகிதர் சமுகமாக, வண. எஸ். வேந்தர்கோன் சுவாமியவர்கள் துக்கசங்கீதம் பாடிக் கடைசிஆசீர்வாதம்கூறச் சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. இவரைஇழந்து துயருறும் மக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும்இனசனருடன் எனது அனுதாபமுஞ் சேர்வதாக.

R. I. P. — நிருபர்

## அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்



சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்

### நன்றியறிந்த ஸ்தோத்திரங்களும் மன்றாட்டங்களும்

சூராவத்தை:— அர்ச். அந்தோனியார், அர்ச். ஆரோக்கியநாதர், சங். அல்போன் சாகன்னியாஸ்திரி இவர்களிடம் இடைவிடாது கேட்டுக்கொண்டதின்படி சென்றவருஷத்தில் நற்சகாயம் அடைந்தேன். நேர்த்தியைப் பூர்த்திசெய்வதில் கவலையீனமாய் இருந்ததற்காக வருந்துகின்றேன். மேற்படி அர்ச்சியசிஷ்டர்களின் நாமங்கள் என்றென்றும் புகழப்படுவதாக. நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கின்றேன்.

Mrs. J. A.

சூராவத்தை:— திருஇருதய நாதரின் இரக்கத்தினலும், பரிசுத்த தேவதாயார், அர்ச். சூசையப்பர், கோடி அற்புதரான அர்ச். அந்தோனியார் இவர்களின் மன்றாட்டாலும் எனதுவேண்டுதல் அனுகூலமானது. நேர்த்திப்படி காணிக்கை அனுப்பி இதைப் பிரசுரிக்கும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நீ. அன்னம்மா

கோக்கிளாய்:— கோடியற்புதரும், ஏழைகளின்பாதுகாவலரும், அகதிகளின் ஆதரவுமான அர்ச். அந்தோனியாரின் சலுகையால் மலடிஎன்று இருந்தஎனக்கு எனது 38-ம் வயசில் ஓர் ஆண் மகவு கிடைத்தது. பிள்ளையும் நானும் நற்சுகமேயிருக்கிறோம். நன்றியாக அவரின் ஏழைகளுக்குக் காணிக்கை அனுப்பி அவரை என்றும் வேண்டிநிற்கும்

அடியாள்
A. அன்னம்மா

### கேட்டநன்மைகள் அனுகூலமானதினல் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

கல்கமுவா: எஸ். கிறகோரி -50—அம்பிற்றியா: எம். டானியல் 2-00 — ருகம: எஸ். டி. ஏ. கொன்சேக்கா 1-00 — பூனைப்பிற்றியா: பி. பேதுரு பொர்ணண்டோ 1-00 — முள்ளிக்குளம்: எம் செபஸ்தியான் சில்வா 2-00 — கருக்குப்பனை: டபிள்யூ. எம். பொர்ணண்டோ 2-00 — முந்தல்: எம். அந்தோனி 4-00 — கரவெட்டி: எஸ். பஸ்ரியாம்பிள்ளை 1-00, பி. கபிரிகேற்பிள்ளை 1-00— கொழும்பு: எஸ். எம். யோசேப்பு 4-00 — நீர்கொழும்பு: கே. எஸ். மனவல் அன்ரனி 1-00—வட்டக்கொட: எஸ். ஜே. டேவிற்பிள்ளை 1-50 —மன்னர்: எஸ். எஸ். கொடிதோர் 5-00—மலாயா: ஜே. சவிரிமுத்து 10-00— கம்பளை: மிசெஸ் ஏ. டி. சேவியர் 3-00— பண்டாரவளை: மிசெஸ் எஸ். வி. பீற்றர் 5-00 — மலாயா: எம். ஜேக்கப் 9-93—பாஷையூர்: மடுத்தீஸ் எலிசபேத் 1-00, மூப்பர் லேஞ 1-00—றக்குவானை: எம். ஆரோக்கியசாமிப்பிள்ளை 1-00— கல்கமுவா: வி. சந்தியாகு 1-00 —வறக்காகொட: ஜே. மனுவல் 2-00— வேப்பங்குளம்: பி. பறுணந்து 3-00 — றம்வொட்டா: பி. எம். எவ். யுவக்கீம் 1-00 — நிகபொற்று: என். டி. சைமன் பிரான்சீஸ் 2-00—நேரியகுளம்: எஸ். ஏ. செபமாலை 1-00 நாவற்காடு: ஏ. எபிரேம் 2-50 — அக்கரபற்றன: ஜி. எம். டயஸ் 1-00 — யாழ்ப்பாணம்: எல். டி. சென் ஜோன்சன் 1-00 — பாஷையூர்: மூப்பர் ஜெயம்மா 1-00.

| The Director. St. Joseph's Conference. Bishop's House JAFFNA. | சென் வின்சென்ற் டி போல்சபைத்தலைவர் மேற்றிராசன மாளிகை யாழ்ப்பாணம். |
|---|---|




# பொதுவர்த்தமானம்

## எலும்பைககாப்பாற்றும்முறை

வாஷிங்ரன் நகருக்குச் சமீபமான அமெரிக்க கடற்படை வைத்திய நிலையத்தைச்சேர்ந்த டக்றர்மார் எலும்புச் சத்திரவைத்தியத்துக்கென்று மனித எலும்புகளைப் பாதுகாக்க ஓர் புதிய முறையைக் கையாண்டுவருகிறார்கள். இந்தமுறையானது ஆஸ்பத்திரிகளெல்லாம் மனிதஎலும்புகளை ஏழுவருடகாலம் பழுதின்றிப் பாதுகாக்கச் செய்வதாகுமென அவர்கள் நம்புகின்றார்கள். பனிக்கட்டியிலே உறையவைத்து இதுவரைகையாளப்பட்டுவந்த பழையமுறை மனிதஎலும்புகளைச் சொற்பகாலத்துக்கே பாதுகாத்துவரலாயிற்று. புதியமுறைப்படி கடற்படைடக்றர்மார் உறைந்த நிலைமையிலிருந்து எலும்புகளை நேரேயெடுத்துக் காயவைக்கின்றனர். அவற்றின் ஈரலிப்புத்தன்மை அதிகமாக நீங்கியதும் பக்குவமாகக் கட்டி வெறுமையான அறைகளில் போட்டுவைக்கிறார்கள். அங்கு சமீபத்திலே 66 சத்திரவைத்தியங்களில் இந்தஎலும்புகள்வைத்துப் பொருத்தப்பட்டுள்ளன.

## கண்ணடியின் ஆரம்பம்

கண்ணடி முதன்முதலாக எகிப்திலே செய்யப்பட்டதுஎன்பதை ஒப்புக்கொள்வதில் ஆராய்ச்சியாளர்கள் உடன்பாடுடையோராய்க் காணப்படுகின்றனர். ஆனல் இதுவிஷயம் ஒருபோதுமே திருப்திகரமாகத் தீர்க்கப்படவில்லை. பிளினிஎன்பவர் கூறுகிறபடி, போனிசியவியாபாரிகள் எகிப்திலிருந்து சோடா ஏற்றிக்கொண்டு சிரியாபோய்ச்சேர்ந்து அங்குகார்மேல் மலைக்குச்சமீபமாகப் பீஎஸ்ஆற்றின் பக்கமாகத்தங்கித் தங்கள்உணவைச் சமைக்கநெருப்புமூட்டினர். சோடாக்கட்டிகளை அடுப்புகளாக உபயோகித்து அவற்றின்மேல் இரும்புப்பானைகளை வைத்திருந்தனர். அப்போது உண்டான கடுஞ்சூடு சோடாவையும் மணலையும் உருக்கிக் கண்ணடியை உண்டுபண்ணியது. இசிறவேலர்கள் ஓர்சோலைக்குத் தீமூட்டியபோதுவெடியுப்பு மணலுடன்உருகிக் கலக்கவே, கண்ணடி கண்டுபிடிக்கப்பட்டதென்று யோசேபஸின் பாரம்பரியம் கூறுகின்றது.

## போட்ஸ்தாபன சகாயம்

அமெரிக்க போட் மோட்டர்கார் அரசரென அறியப்பெற்று உலகின் மிகப்பெரிய கோடிசுரர்களில் ஒருவராய் விளங்கியிருந்தவரான திரு. ஹென்றிபோட்அவர்கள் உலகில்சமாதானத்தையும், சுதந்திரத்தையும் அபிவிர்த்திசெய்யும் நோக்கமாக ஐம்பதுகோடிடலர் அதாவது 250 கோடி ரூபாவை விட்டுப்போயிருந்தார். இந்த நிதியிலிருந்து அதனைப் பரிபாலித்துவரும் ஸ்தாபனத்திற்கு வருடம்ஒன்றுக்கு 3 கோடிடலர் அதாவது 15 கோடிரூபா வருமானங் கிடைக்கிறது. இதைக்கொண்டு அந்தஸ்தாபனம் இந்தியாவிலே மாதிரிக்கமங்களை ஆங்காங்கு ஸ்தாபித்து நவீனமாதிரியான கமத்தொழில் முறைகளிலே சனங்களுக்குப்பயிற்சியளிக்கப் போகின்றது. இந்தக்கமங்கள் கமத்தொழில்விஷயமாய் அதிகம்பிந்திய புதியகொள்கைகளைப் பயிற்சிமுறையில் செய்துகாண்பிக்க உபயோகிக்கப்படும்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday October 25 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org